
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨௦௧௪. கார்த்திகை பரல்-௪

திசம்பர் 1983

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-ருஅ தி. வ. ஆண்டு உ0கச, கார்த்திகை பரல்-ச
திசம்பர் 1983

கலைச்சொல்லாக்கம்

நம் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டம் தொடங்கிய பின்னர் இந்திய மொழிகளில் கல்வி பயிற்ற வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது. மேலை நாடுகளில் மெத்த வளரும் அறிவியல் துறைகள் பற்றித் தமிழில் நூல்கள் படைக்க வேண்டுமென்ற உணர்வு தோன்றியபோது அத் துறைகளிலுள்ள கலைச்சொற்களை எப்படித் தமிழாக்குவது என்ற சிக்கல் எழுந்தது. கடந்த ஐம்பதாண்டு களாகப் பல்வேறு அறிஞர்கள் இத்துறையில் ஈடுபட்டிருப்பினும் கலைச்சொல்லாக்கம்பற்றிய சிந்தனை தெளிவடையவில்லை.

தொடக்கத்தில் தமிழில் கலைச்சொற்களை உருவாக்கியவர்கள் இயன்றவரை வடசொற்களை அப்படியே தமிழ் வரிவடிவில் தந்தனர். அவ்வமயம் இத் துறையில் ஈடுபட்டிருந்தவர் ஒருசிலராகவேயிருந்த காரணத்தால் இவை ஏற்றுக்கொள்ளப்பெற்றன. ஆனால் பெரு மளவில் பலர் இத் துறைகளைப் பயிலத் தொடங்கியபின், நல்ல தமிழ்ச் சொற்கள் வடசொற்களுக்கிணையாகப் படைக்கப்பெற்றன. அன்றி லிருந்து இன்றுவரை கலைச்சொல்லாக்கப் பணியில் முதலில் வட சொற்கள் இடம் பெறுவதும் பின்னர் தமிழ்ச் சொற்களாக அவற்றை மாற்றியமைப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு வடசொற்களைப் பயன்படுத்துவோர் கூறும் முதற் காரணம் கலைச்சொற்கள் பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும். அதனுல் மக்களுடைய பேச்சுவழக்கிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றையே கலைச்சொல்லாகப் பயன்படுத்த வேண்டும் என்பர் அவர்.

கலைச்சொற்கள் ஒரு குறிப்பிட்ட துறையை ஆழமாகப் பயில் வோரே பயன்படுத்துபவையாம். அவை பொதுமக்களும்

புரிந்துகொள்ளும் வகையில் இருக்க வேண்டுமென்பதில்லை. ஓரளவு அடிப்படை அறிவு பெற்றவர்களே கலைச்சொற்களைப் பயன்படுத்து வர். அடுத்து, முதன் முதலில் கலைச் சொற்களைத் தமிழிலேயே படைத்துவிடின் முற்கூறிய இரட்டைப் பணி—முதலில் வடசொல்லைப் பயன்படுத்தி, பின்னர் தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்துவது—குறையும். இத்தகைய சிக்கல் எழுகின்றதே யென்பதற்காகச் சிலர் ஏன் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழிலும் பயன்படுத்திக்கொள்ள லாமே என்று கூறுகின்றனர். வடசொல் பயன்படாவிட்டாலும் தமிழ்ச்சொல் இடம் பெறுமல் போனாலே போதும் என்பது அவர்கள் எண்ணம். ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்திக்கொள்ளலா மெனின் கலைச்சொல்லாக்க முயற்சியே தேவையில்லையே!

கலைச்சொல்லாக்கத்தைப்பற்றி கிறீன் வைத்தியர் என்று அழைக்கப்பெற்ற சாமுவேல் எஃப். கிறீன் என்ற அமெரிக்க மருத்து வர் நூறு ஆண்டுகட்கு முன்னரே கூறிய கருத்துகள் இன்றும் நினை வில் கொள்ள வேண்டியவையாம். அவர் தமிழில் இரணவைத்தியம், (சர்ஜரி) மனுஷவங்காதிபாதம் (அனடமி), முதலான பல அறிவியல், மருத்துவ நூல்களைத் தமிழில் படைத்தவர்.

கலைச் சொல்லுக்கிணையான தமிழ்ச்சொல்லை முதலில் இலக்கிய நூல்களில் பார்க்கவும். அவற்றில் கிடைக்காவிடின், பேச்சு வழக் கில் தேடவும். தமிழில் எவ்வகையிலும் கிடைக்கவில்லையென்று உறுதி செய்தபின் வடமொழியில் பார்க்கவும். வடசொற்களைப் பயன்படுத்தும்போது தமிழ் இலக்கண முறைப்படி தமிழ் மொழியின் ஒலிக்கேற்றவகையில் வடசொற்களை மாற்றித் தமிழ் ஒலி, வரிவடிவத் தில் பயன்படுத்தவும். அதிலும் கிடைக்காதபோது ஆங்கிலத்தைப் பயன்படுத்தவும். அதையும் மேற்கூறியவாறு தமிழ் இலக்கண ஒலி முறையின்படி தமிழாக்கிப் பயன்படுத்தவும். இவையே அவர் விதித் தவை. கூடியவரை தமிழையே பயன்படுத்தவேண்டும். அஃதில்லை யேல் பிறமொழிச் சொற்களைத் தமிழ் வடிவாக்கம் செய்தே பயன் படுத்த வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்ற களஞ்சியங்கள்பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்ட ஒரிய மொழிப் பேரறிஞர். டாக்டர். கனுங்கோ குறிப்பிட்ட கருத்துகள் சிந்திக்க வேண்டியவை. அவர் தனி ஒரு மனிதராக முயன்று ஒரிய மொழியில் 75 தொகுதிகளில் கலைக்களஞ்சியத்தை உருவாக் கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதுவரை 35 தொகுதிகள் வெளி யிட்டுள்ளார். எஞ்சியவை தொடரும்.

தூய தமிழில் கலைச்சொற்களை உருவாக்குவதுபற்றி அவர் பேசுகையில் 'தூய தமிழில் படைக்கப்பெறும் கலைச்சொற்களை மக்கள்

புரிந்துகொள்கிறார்களென்றால் அவற்றையே பயன்படுத்துவதில் தவறில்லை. வடமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்த வேண்டு மென்பதில்லை' யென்றார்.

சப்பான் மொழியில் கலைச்சொற்களை எப்படி உருவாக்கு கிறார்கள் என்பதுபற்றியும் அவர் விளக்கினார். இரண்டாம் உலகப் போரில் பேரிழப்புக்குள்ளான அந் நாடு கடந்த நாற்பதாண்டுகளில் மிக வேகமாக முன்னேறியதற்குக் காரணம் அந் நாட்டு மக்களின் உடலுழைப்பும் தாய்மொழி வாயிலாக அவர்கள் பெற்ற கல்வியும் தான் என்பதை யாவரும் அறிவர். அந்நாட்டில் மருத்துவம், பொறி யியல் போன்ற அனைத்துத் துறைகளிலும் தாய்மொழியே பயிற்று மொழியாக உள்ளது. கலைச்சொல்லாக்கத்திற்கு அவர்கள் பயன் படுத்தும் முறையைப்பற்றி டாக்டர். கனுங்கோ குறிப்பிட்டது வியப் பாக இருந்தது. ஒரு பொருளின் பல்வேறு பாகங்களைப் பிரித்தபின் அவற்றுக்குரிய பெயர்கள் சப்பான் மொழியில் இருந்தால் பயன் படுத்திக்கொள்வார்களாம். தவிர்க்க முடியாத இடங்களில் ஆங் கிலச் சொற்களை உள்ளபடியே பயன்படுத்துவார்களாம். ஆனால் கூடியவரை புதிய சொற்களைப் படைத்துவிடுவார்களாம். ஒரு பொருளுக்கு ஏதாவது ஒரு சொல்லைச் சொல்லி இதுதான் இப் பொருளுக்குப் பெயர் என்று கூறிவிடுவார்களாம். அச் சொல் மூல ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகவோ அல்லது பொருள் தொடர்புடையதாகவோ இருக்க வேண்டுமென்று பார்ப்பதில்லையாம். அவர்கள் விரும்பும் இடுகுறிப் பெயர்களை யிடுவார்களாம்.

இவ்வாறு பல வகைகளில் கலைச்சொல்லாக்கம் நடைபெறு கிறது. எனவே, இயன்றவரை நல்ல தமிழ்ச் சொற்களையே கலைச் சொற்களாகப் படைப்பது மொழியின் தூய்மை கெடாது காப்பதற்கும் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமளிப்பதற்கும் பயன்படும்.

———

கலையுலகின் நிலை உயர

அலைஅலையாய் எழுந்துதமிழ்க் கலையுலகைச் சீரழிக்கும்
அயல்மொழியின் மேலாண்மை தனைமாற்றிக்
கலைச்சொற்கள் புதியனவாய்ப் படைத்துதமிழ் நிலையுயரச்
செய்வதற்கே முனைதல்வேண்டும்; இன்றேல்
கலைந்திடும்நம் செந்தமிழின் சீர்மையெனும் ஓவியமே
இயல்இசையில் நாடகத்தில் இனியதமிழ் நாளும்
நிலைபெறவே வேண்டுமெனில் நெஞ்சத்தில் தமிழுணர்வாம்
நீடியதோர் புரட்சிப்புயல் தோன்றல் வேண்டும்.

—த. சி. வே.

அதியனும் அதிகனும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

அரிய நெல்லிக் கனியை ஔவைக்குத் தந்து அழியாப் புகழ் கொண்ட வள்ளல் அதியமான். அவன் பெயர் அகரமுதலிகள், ஆராய்ச்சி நூல்கள், வரலாற்று நூல்கள் ஆகியவற்றில் 'அதியமான்' என்றும் 'அதிகமான்' என்றும் ஒப்பவழக்குப் பெற்றுத் தொடர்ந்து வருகின்றது. இப் பெயர்களுள் முறைமையானது எது வெனக் காண்பதே இவ்வாய்வு.

அதியமான் முழுப்பெயர், அதியமான் நெடுமான் அஞ்சி என்பது. 'எழினி' என்றும், 'அஞ்சி' என்றும், 'நெடுமான்' என்றும், 'நெடுமிடல்' என்றும், 'மழவர் பெருமான்' என்றும், 'அதியர் கோமான்' என்றும், பிறவாறும் சுட்டப்பெறுகிறான். இப் பெருமகனைப்பற்றிய விரிவான செய்திகள் புறநானூற்றில் பொதுளியுள்ளன. இவனைப் பெருகப் பாடிய புலவர் பெருமாட்டியர் ஔவையார் என்பதைச் சுட்ட வேண்டியதில்லை.

புறநானூற்றுப் பாடல்களில்,

"ஆர்கலி நறவின் அதியர் கோமான்" (91)

"அணிபூண் அணிந்தயானை இயல்தேர் அதியமான்" (101)

"மதியேர் வெண்குடை அதியர் கோமான்" (392)

எனப் பாராட்டப்பட்டுள்ளான்.

இவற்றுள் முதற்கண் உள்ள 'ஆர்கலி நறவின் அதியர் கோமான்' என்பதில் மட்டும் பாடவேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. அவை, 'அதிகர் கோமான்', 'உதியர் கோமான்' என்பவை. இப் பாடவேறுபாடுகள் தவறானவை என்பதை அதன் பழைய உரையே தெள்ளிதின் நிறுவுகின்றது. "ஆரவாரத்தைச் செய்யும் மதுவினையுடைய அதியர் கோமான்" என்பது அவ்வுரை. அன்றியும், அவ்வுரையின் முடிநிலையும் "அதியர் கோமான்! அஞ்சி! பெரும! மன்னுக எனக்கூட்டி வினைமுடிவு செய்க" என்றேயுள்ளது. ஆகலின் ஒரு காலைக்கு இரு காலை அப் பாடலின் பாடம் 'அதியன்' என்பதே என அதன் பண்டையுரையாசிரியர் எழுத்தே வலியுறுத்துகின்றது. மேலும், உரையாசிரியர் காலத்திற்கு முன்னரே பாட வேறுபாடு உண்மை எனின், அவர் பாட வேறுபாட்டைக்

காட்டாது இரார். அவ்வாறு பாட வேறுபாட்டைச் சுட்டிச் செல்வதும் அதற்குத் தக உரை கூறுவதும் அவர் வழக்காறும். அவ்வாறு சுட்டாமை ஒன்றே அப் பாட வேறுபாடு உரையாசிரியர் காலத்திற்குப் பிற்பட்டது என்பதைத் தெளிவிக்கும்.

உரையாசிரியர் காலத்திற்கு முற்படவே திணை துறை வகுக்கப் பெற்று நிகழ்வும் பொறித்து வைத்த திறவோர் குறிப்பில் 'அதியமான்' பெயராட்சியுண்மை பெரிதும் கருதத்தக்கது.

''அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது'' (87)

''அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது'' (97)

''அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை அவர் பாடியது'' (100)

''அதியமான் நெடுமான் அஞ்சியை அவர் பாடியது'' (103)

''அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித்தானை ஔவையார் பாடியது'' (206)

இவ்வாறே 208, 231, 235, 391, 392 ஆகிய பாடல் குறிப்புகளிலும் 'அதியமான்' என்றே குறிப்பிடுகிறுர். இப் பத்திடங்களுள் ஒரோ ஓர் இடத்தில் மட்டும் 'அதிகமான் நெடுமான் வஞ்சி' எனப் பாட வேறுபாடு காணப்பட்டுள்ளது. வஞ்சி என்றுள்ள பாடம் கொண்டே அப் படியெடுப்பாளர் கருத்தின்மையறியக் கூடுமன்றே !

இனி 158ஆம் புறப்பாடலில் வள்ளல் எழுவர் பெயரும் தொடர்ந்து கூறுமிடத்துப் பெருஞ்சித்திரனுர், 'எழினி' என்றுராக, உரையாசிரியர் 'எழினி அதியமானும்' என்று விரித்து எழுதியமை நோக்குதற்குரியதாம்.

பண்டைப் பாவலர்களும், புறநானூற்று உரையாசிரியரும் 'அதியமான்' என்னும் பெயரைச் செவ்விதிற் குறித்துப் போற்றினுராகப், பிற்காலப் படியெடுப்பாளர்களும் பதிப்பாசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் அதியமானுக்கும் அதிகமானுக்கும் வேறுபாடின்மை கொண்டு எழுதுவாராயினர். அதன் விளைவே பழம் புலவர் பாடல்களிலும் உரைகளிலும் 'அதிகமான்' என்று குறிக்கப் பெறலாயிற்றும். பின்னுளைத் தனிப் பாடல்கள் ஒன்றிரண்டில் 'அதிகன்' 'அதிகா' என்று குறிக்கும் நிலையுடன் 'அதிகை'க்கும் அதிகனுக்கும் சொல்லொப்புக் காட்டி, அதியரின் முன்னோர் ஊர் 'அதிகை'யாகலாம் என்று ஆயவும் தூண்டியதாம்! எழுத்து மாற்றத்திற்கு வயப்பட்ட ஏமாற்றங்கள் இவை என்க.

புறம் 158 போலவே, சிறுபாணாற்றுப் படையும் வள்ளல் எழுவர் பெயரை வரிசைப் படுத்துகின்றது. அங்கு 'அரவக்கடற் ருனை அதிகன்' எனப் பாடம் உள்ளது. நச்சினார்க்கினியர் உரையும் 'அதிகன்' என்றே செல்கின்றது. அதே நச்சினார்க்கினியர் தொல். புறத்திணை. 7ஆம் பாடல் உரையில் "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன்மதிற் புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம் என்றுள்ளது. அவ்விடத்தில் அதிகமான் என்னும் பாடவேறுபாடும் உண்டு.

குறுந்தொகை 393ஆம் பாடலில் "பாண்டியன் வினைவல் அதிகன்" என்று வரும் இடத்தில் 'அதிகன்' என்பது பிழையாதலைப் பேராசிரியர் கந்தசாமியார் திருத்தியுள்ளார். அவர் "இராமசாமிபுரம் மூவரையர் வண்ணம் பாடிய பூண்டியப்பப் புலவர் ஏடு பார்த்துத் திருத்தியது" என்று குறித்துள்ளார்.

'எழினி' எழுதிய புலவர் பாண்டியனார்," சேரன் சேரமான், மலையன் மலையமான், தொண்டையன் தொண்டைமான் என்றாற் போலவே அதியன் அதியமான் என வழங்கும். இவ்விரண்டனையும் அதிகன் அதிகமான் எனவும் வழங்குப; அதியன் மரபினர் அதியர்" என்றார்.

எடுத்துக்காட்டுடன் அதியனை விளக்கிய அவர், பிறர் கோட்கூறி "அதியன் மரபினர் அதியர்" எனத் தம் கோள் நாட்டினார் ஆதல் தெளிவு. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூரார் யாண்டும் 'அதியமான்' என்றே கொண்டார்.

"அதியன் என்பார் குடியிற் பிறந்து சிறந்தமை பற்றி நெடுமான் அஞ்சியை அதியமான் நெடுமான் அஞ்சியென்று சான்றோர் கூறியுள்ளனர். அதியமான் என்பது அதிகைமான் என்றும் சில ஏடுகளில் காணப்படுவதுபற்றி அதியர் என்பது அதிகையர் என்பதன் திரிபு என்றும் ஒரு காலத்தில் இவர் அதிகையென்னும் ஊரில் வாழ்ந்திருந்து பின்னர்ச் சேர நாட்டில் குடியேறியிருத்தல் வேண்டும் என்றும் இதனால் அதிகையராகிய இவர் அதியர் எனப்படுவாராயினர் என்றும் அறிஞர் கருதுகின்றனர்" என்றார் உரைவேந்தர் ஔவை அவர்கள். முற்படக்கூறியதே ஔவை கருத்து என்பது வெளிப்படை. ஆயினும் பிறர் கருத்துப் பிறிதொன்றுண்மையைச் சுட்டுவதே அவர் கருத்தாகலின், அக் கருத்து அவர்க்கு இன்மை தெளிவாம். அன்றியும் அவர் தம் உரையுள் யாண்டும் அதியமானை 'அதிகமான்' என்று குறித்தார் அல்லர் என்பது சான்றும்.

அதிகை என்னும் பாடுபுகழ் ஊர் உண்மையும், அதிகமான் என்னும் பாட வேறுபாடு உண்மையும் போட்ட முடியே அதியமானை அதிகைக்குக் கொண்டு சென்றதாம். உதியர் உதிகர் ஆகாமைபோல, அதியர் அதிகர் ஆகார்; ஏனெனில் இரண்டும் குடிப்பெயர்கள் ஆகலின். அதியன் விண்ணத்தனார் என்னும் புலவர் (அகம். 301) அதியர் குடியினர் ஆகலின்; இப்பெயர் பெற்றார் என்பது எண்ணத்தக்கது.

இனி, அதியமான் அதிகை சார்ந்தவனாக இருந்திருப்பனேல் அவன் பேரும் பெற்றியும் சீரும் சிறப்பும் ஊரும் உறவும் பலப்பல பயில விரித்துப் பாடும் புலவர், அதிகையைச் சுட்டாது ஒழியார். மேலும் சேரர், சோழர், பாண்டியர், சளுக்கியர், பல்லவர், விசய நகர வேந்தர், நாயக்கமன்னர் என்னப் பல்வேறு கால ஆட்சியர் கல்வெட்டுகளைப் பெற்ற அதிகை, தன் மண்ணுக்குத் தனிப்புகழ் சேர்த்த வள்ளல் அதியனைச் சுட்டாது ஒழியாது. ஆதலால் அதியனுக்கும் அதிகைக்கும் தொடர்பு இல்லையாம்.

பெருக வழங்கும் பாடற் சான்றையும், உரைச் சான்றையும், மொழியியற் சான்றையும் வலுவாக விலக்கிப் பாட வேறுபாட்டையும் பிற்கால மயக்க உன்னிப்பையும் பொருட்டாக்கி அதியனை 'அதிகன்' என்று வழங்குவது 'பேனைப் பெருமாள்' ஆக்குவதாம்.

விழிகள் வேர்த்தோம்!

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

''எண்திக்கும் பரந்திருக்கும் தமிழ ரெல்லாம்
இலங்கைக்கே இதயத்தை அனுப்பி வைத்தோம்;
புண்கக்கும் இரத்தத்தைத் தடுப்ப தற்கே
புரியாமல் விழிவேர்த்தோம்: புலம்பு கின்றோம்!
கன்றுக்கும் சமநீதி ஈந்த வேந்தன்
வழிவந்த பெண்கட்குக் கற்ப ழிப்பாம்;
என்றைக்கும் உயிர்க்கொலையைத் தவிர்த்த 'புத்தர்'
இன்றைக்கு அங்கிருப்பின் அவருஞ் செத்தார்!

முப்பத்தைந் தாண்டுகளாய் மூண்டி ருக்கும்
மொழி: இனத்தின் பகைத்தீயை அணைப்ப தற்குத்
தப்பாமல் பெரும்முயற்சி செய்தோம்; சீறும்
சிங்களரை அரவணைத்தும் சென்றோம்; தோற்றோம்!
எப்பொழுதும் இக்கொடுமை தொடரு மென்றால்
ஈடில்லாத் தமிழினத்தின் வேரும் சாகும்!
இப்பொழுதே கிளர்ந்தெழுவோம்: இலங்கைத் தீவை
இரு கூறாய் ஆக்கிடுவோம்: இனிதே வாழ்வோம்!

சில புதிய கல்வெட்டுகள்


[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

திருச்சியிலும், திருச்சியின் சுற்றுப்புறங்களிலுமுள்ள கோயில்களை ஆய்வுக் கட்டுரைகளுக்காகப் பார்வையிட்டபோது இக் கட்டுரையின் ஆசிரியரால் தனியாகவும், நண்பர்களுடனும் சில புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை குறித்த செய்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.


திருச்சி உறையூர்ப் பகுதியில், சாலைவீதியில், உள்ளடங்கிய நிலையில், பழஞ்சிறப்பு வாய்ந்த கோயிலொன்று அமைந்துள்ளது. அருள்மிகு தான்தோன்றீசுவரர் திருக்கோயிலென்று அழைக்கப்படும் இக்கோயிலைப் பற்றித் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தம்முடைய முற்காலச் சோழர் கோயில்கள் என்ற ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள அடைமொழியும் பெயரும் இல்லாத இராசகேசரிக் கல்வெட்டொன்றைக்கொண்டு, இக்கோயில் முதலாம் ஆதித்த சோழன் காலத்துக் கோயிலாக அவர் நிறுவியுள்ளார். நாங்கள் இக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது, கோயில் உள் மண்டபத்து வாயில் நிலையின் இருபுறங்களிலும், அடர்த்தியான சுண்ணாம்புப் பூச்சின் கீழ், இக் கல்வெட்டுகள் மறைந்திருப்பது என்னாலும் தொல்பொருள் ஆய்வுத்துறையின் திருச்சி மாவட்டப் பதிவாளர் அப்துல் மஜீதாலும் கண்டுபிடிக்கப்பட்டன. உடன் அப் பூச்சை அகற்றி, கடுமையான முயற்சிக்குப்பின் அக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. இதுவரையிலும் ஆய்வாளர் பார்வையில் படாதிருந்த அக் கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பினால், இக் கோயிலின் வரலாறே திசைதிரும்பியுள்ளது. இக் கோயிலிலிருந்து இதுவரை படிக்கப்பட்ட கல்வெட்டுகளுள் காலத்தால் முந்தியதாகக் கருதப்பட்டது முதலாம் ஆதித்த சோழனுடையதே. ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இவ்விரண்டு கல்வெட்டுகளும் ஆதித்த சோழனுக்குக் காலத்தால் முற்பட்ட இரண்டாம் வரகுண பாண்டியனுடையவை.

இவ்விரண்டில், வலப்புற நிலையிலுள்ள கல்வெட்டில், இம் மன்னனின் பெயர் 'கோமாறஞ் சடையனான ஸ்ரீபதி வரகுண மகாராசன்' என்றும், கொடையளிக்கப்பட்டபோது மன்னனின் ஆட்சியாண்டு, நாலாவதற்கெதிர் ஒன்பதாமாண்டு, அதாவது பதின்மூன்று என்றும், இக்கோயில் இறைவனின் பெயர் நந்திவர்ம மங்கலத்துத் திருத் தான்தோன்றிப் பெருமான் அடிகள் என்றும் கூறப்பட்டுள்ளது.

முள்ளிக் கரும்பூர் சிவன் கோயில்



இடிந்து சிதைந்த நிலையிலுள்ள விமானம்
கருவறைச் சுவரிலிருந்து செடிகள் செழித்து
வளர்ந்துகொண்டிருப்பதைக் காணலாம்



முள்ளிக் கரும்பூர் சிவன் கோயிலின் இன்றைய நிலை

இக்கோயில் இருக்கும் பகுதி இப்போதும் 'திருத்தாங்தோனி' (திருத் தான்தோன்றி என்பதின் மரூஉ) என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ முப்பத்தொன்பது வரிகளுடன் விளங்கும் இக் கல்வெட்டின் சில வரிகளில், எழுத்துகள் தேய்ந்தும் சிதைந்தும் உள்ளன. வரகுண மகாராசன், அண்டநாட்டு வேளான் என்பார் கையில் நூற்றிருபது நல் பழங்காசுகளைக் கொடுத்து, அதனுல் வரும் வட்டியைக் கொண்டு சில அறங்களைச் செய்யுமாறு சொன்ன செய்தியும், சோமயாஜி நம்பி, நக்கன் என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டின் இறுதியில் 'ஆக இப்பொன் ஐம்பதும் இக்காசும் இப்பலிசையும் ஏற்றி மூன்று கூறிட்டு' இரண்டு கூறு இறை வழிபாட்டிற்கும், ஒரு கூறு இறை காவலுக்கும் அளிக்க வேண்டுமென நந்திவர்ம மங்கலத்துப் பெருங்குறி சபையினர் எடுத்த முடிவு காணப்படுகிறது.

உள்மண்டப வாயிலில் இடப்புற நிலையிலிருக்கும் கல்வெட்டும் இம் மன்னனுடையதே. இது முன்னதைவிட அழிந்த நிலையில் உள்ளது. முதல் பதினுன்கு வரிகள் ப்டிக்க முடியாதபடி சிதைந்துள்ளன. பதினைந்தாவது வரியிலிருந்து முப்பத்தெட்டாம் வரி வரையிலுள்ள எழுத்துகள் ஓரளவு படிக்கும் நிலையில் உள்ளன. இவ் வரிகள், இக் கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்க, நிலம் விற்கப்பட்ட செய்தியையும், அங் நிலத்துக்குரிய எல்லைகளையும் தெளிவாகக் கூறுகின்றன.

இக் கோமாறன் சடையனின் இதே ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருவெள்ளறையிலுள்ள வடதிருவானைக்கா பெருமானடிகள் கோயிலிலும், லால்குடியிலுள்ள திருத்தவத்துறை மகாதேவர் ஆலயத்திலும், காணப்படுகின்றன. இன்னெரு கல்வெட்டு மலைக்கோட்டையிலுள்ள மேல் குடவரையில் காணப்படுகிறது. இம் மூன்றிலுமே இம் மன்னன், அண்ட நாட்டு வேளான் என்பாரிடமே நூற்றிருபது பொற் காசுகளைக் கொடையாகக் கொடுத்து இறைவனுக்கு நந்தா விளக்கெரிக்கச் சொல்லியிருக்கிருன். இக் கல்வெட்டுகளினுல் 'அண்ட நாட்டு வேளான்' மன்னனுக்கு மிக விருப்பத்துக்குரிய அதிகாரியாகவோ. அல்லது நம்பிக்கைக்குரிய நண்பனுகவோ இருந்திருக்கலாம் என்பது பெறப்படும்.

இம் மன்னன் ஆட்சிப் பீடமேறிய காலம் கி. பி. 862 ஆகக் கருதப்படுகிறது. இக் கோயில் கல்வெட்டுகள் இம் மன்னனின் பதின் மூன்றும் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருப்பதால், இவற்றின் காலம் கி. பி. 875 எனக் கொள்ளலாம். கி. பி. 875லேயே இக் கோயில் மிக்க சிறப்புடன் இலங்கிய நிலையை இக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. எனவே, திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியும்

குறிப்பிட்டிருப்பதுபோல் இக்கோயிலை முதலாம் ஆதித்த சோழன் காலத்துக் கோயிலாகக் கொள்ள முடியவில்லை. இக் கோயிலுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள திரு முக்கீச்சரம் கோயிலைச் சம்பந்தர் பாடியிருக்கிறார். ஆனால், இக்கோயில் தேவார இலக்கியங்களில் வைப்புத் தலமாகக்கூடக் குறிப்பிடப்படவில்லை. எனவே இக்கோயில் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பும் கட்டப்பெற்றிருக்கலாம். இக் கோயிலில் காணப்படும் வாயில்காப்போர் சிற்பங்களும், அம்மையப்பர் சிலையும் மிகத் தொன்மையானவை. அவற்றின் கலையமைதி, பிற் பட்ட பல்லவர் கலைமுறையை ஒத்துள்ளது. எனவே, இக்கோயில் பிற்பட்ட பல்லவர்களாலேனும் அல்லது அவர்களுக்குக் கீழிருந்து தஞ்சைப் பகுதியை ஆண்டுவந்த முத்தரையர்களாலேனும் கட்டப் பட்டிருக்கலாம். கோயில், பல திருப்பணிகளைக் கண்டிருப்பதால் கட்டட அமைப்பு முறை கொண்டு, எந்தவொரு முடிவுக்கும் வர இயலாத நிலையுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள குழுமணியிலிருந்து, ஒரு கிலோ மீட்டர் தொலைவில், புலிவலம் என்னும் சிற்றூரில், அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் ஆதியில் அகத்தீசுவரர் கோயிலாகவே வணங்கப்பட்டு வந்தது. இடைக் காலத்தில் சுற்றாலைத் தெய்வமான சுப்பிரமணியருக்கு முக்கியத்துவம் ஏற்பட்டு, முதன்மைத் தெய்வமான அருள்மிகு அகத்தீசுவரருக்குச் சிறப்புக் குன்றியது. இன்று இத்தலம் சுப்பிரமணியர் தலமாகவே கருதப்பட்டும், வணங்கப்பட்டும் வருகிறது.

இக்கோயில் அம்மன் திருமுன்னின் வெளிப்புறச் சுவர்களில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுப் பகுதிகள், ஒரே கல்வெட்டின் சிதைந்த துணுக்குகளாகும். பிற்காலத்தில் திருப்பணி செய்தவர்கள், கற்களை விருப்பம்போல் மாற்றியமைத்து விட்டதால் நேர்ந்த நிலை இது. இக் கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதன் காலத்தைக் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

அம்மன் கோயிலின் உள் மண்டபத்தின் வலப்புறச்சுவரில், சுண்ணாம்புப் பூச்சின்கீழ் கல்வெட்டொன்று மறைந்திருப்பது இக் கோயிலை ஆய்வு செய்தபோது, என்னாலும், தொல்பொருள் ஆய்வுத் துறையின் திருச்சி மாவட்டப் பதிவாளர் அப்துல் மஜீதாலும் கண்டு பிடிக்கப்பட்டது. கோயில் அலுவலர்களின் துணையுடன் இச் சுவரி லுள்ள சுண்ணாம்புப் பூச்சை அகற்றி, கழுவித் தூய்மை செய்த பிறகு இக் கல்வெட்டைப் படிக்க முடிந்தது. இது, அதே அம்மன் கோயி லின் புறச் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளோடு தொடர்புடையதாய்

அமைந்துள்ளது. அம்மன் கோயில் திருப்பணியின்போது கற்களை உள், வெளியாக மாற்றிக் கட்டியதால் இந்நிலை நேர்ந்திருக்கலாம்.

இக் கல்வெட்டு இரண்டு துண்டுகளாய் உள்ளது. ஒன்றில், இக்கோயிலுக்குக் கொடையளித்தமைக்குச் சான்றுளர்களாய் இருந்த பெருமக்களின் பெயர்கள் காணப்படுகின்றன. பிரும்மாதிராஜன், பேழைக் குடையான், செம்பியன், வன்னியன், திருநட்டப்பெருமான், துங்கப் பல்லவரையன் போன்ற பல பெயர்கள், 'இப்படி அறிவேன்', என்ற தொடருடன் முடிகின்றன. இக்கோயில் அமைந்துள்ள இடம் அரிஞ்சயச் சதுப்பேதி மங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. அரிஞ்சயச் சோழன் முதற் பராந்தகனின் மகனும் இரண்டாம் பராந்தகனுன சுந்தர சோழனின் தந்தையும் ஆவான்.

இன்னொரு கல்வெட்டில், விழுப்பரையன், சடையன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதிலும் 'அரிஞ்சய' என்ற பெயர் தொடர்பின்றிக் காணப்படுகிறது. 'அரிஞ்சயச் சதுப்பேதி மங்கலம்' என்ற தொடரின் ஒரு பகுதியாக இது இருக்கலாமெனக் கருதவேண்டியுள்ளது. புலிவலத்துக்கு அண்மையிலுள்ள நங்கவரத்தில் சுந்தரேசுவரர் கோயில், பிடாரிகோயில் என்று இரண்டு கோயில்கள் உள்ளன. இவ்விரண்டு கோயில்களிலும் உள்ள கல்வெட்டுகளிலுமே இவ்விடம் 'காவிரியின் தென்கரையில் அமைந்த தேவதான பிரமதேயமான அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக் கல்வெட்டுகளில் மன்னன் பெயர் எந்தவித அடைமொழியுமின்றி 'பரகேசரி' என்று மட்டும் குறிக்கப்பட்டிருப்பதால் இது அரிஞ்சயன் காலத்தனவாகலாம் என்று கல்வெட்டாய்வாளர்கள் கணிக்கின்றனர்.

முதற் பராந்தகன் காலத்திலிருந்தே இப் பகுதி அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலமாகவே வழங்கி வந்தமைக்கு நங்கவரத்தில் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இந்தப் பகுதியிலுள்ள பல கோயில்கள் முதற் பராந்தகன் காலத்தனவாக அமைந்துள்ளமையால், இக் கோயிலும் அப்பெருவேந்தன் காலத்திலேயே கட்டப்பட்டதாகக் கொள்வதே எவ்வாற்ருனும் பொருந்துவதாகும்.

அம்மன் கோயிலின் கருவறைப் புறச்சுவர்களிலுள்ள கல்வெட்டுகளில் இவ்வூருக்கு அண்மையிலுள்ள வயலூர், முள்ளிக் கரும்பூர் போன்ற ஊர்களின் பெயர்கள், வயலூர் விச்சாதிப் பல்லவரையன் என்று மக்களின் பெயர்களுடன் இணைந்த நிலையில் காணப்படுகின்றன. கழுமலமுடையான், செல்ல நம்பி என்ற பெயர்கள் 'இப்படி அறிவேன்' என்ற தொடருடன் முடிகின்றன. இக் கல்வெட்டு 'எதிரிலிச் சோழனவன் வளமலை செய்ய இக்கல் வெட்டினேன்' என்று முடிகிறது. 'வீரதுங்கச் சதுப்பேதி மங்கலத்து...அரையனேன்

இவையென் எழுத்து' என்று இக் கல்வெட்டைப் பொறித்தவன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

'எதிரிலிச்சோழன்' என்ற பெயர் சிந்தனைக்குரியது. சோழர் வரலாற்றில் 'எதிரிலிப் பெருமான்' என்ற பெயருக்குரிய மன்னனாய் அறியப்படுபவன், இ ர ண் டா ம் இராசாதிராசன், இம் மன்னன் இரண்டாம் இராசராசனுக்கும் மூன்றும் குலோத்துங்கனுக்கும் இடைப் பட்ட காலத்தில் சோழநாட்டை ஆண்டான். 'எதிரிலிச்சோழன்' என்று இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் பெயர் இம் மன்ன னுடையதாகவுமிருக்கலாம்; மன்னன் பெயரைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொள்வதை ஒரு சிறப்பாகவும் பெருமையாகவும் மக்கள் கருதிவந்த அக்காலத்து நிலையையொட்டிப் பெரும் பொறுப்பில் இருந்த யாரேனும் ஒருவருடைய பெயராகவும் இருக்கலாம். அம்பர் பெருந்திருக்கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றில் 'எதிரிலிச் சோழீச்சரம்' என்றோர் ஆலயத்தின் பெயரும், வைகாவூராகிய எதிரிலிச் சோழ நெற்குன்றம் என்றோர் ஊரின் பெயரும் குறிப்பிடப் பட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கதாம். இக் கல்வெட்டின் எழுத் தமைதி, 'எதிரிலிச் சோழன்' என்ற பெயர், இவற்றைக் கூட்டிப் பார்க்கும்போது, இது இரண்டாம் இராசாதிராசன் காலத்துக் கல் வெட்டாக இருக்குமோ என்று கருதத் தோன்றுகிறது.

திருவரங்கம் புகைவண்டி நிலயத்திற்கு வடக்கிலுள்ள காட்டழகிய சிங்கர் கோயில், மாடக்கோயில் போன்ற அமைப்புடைய தாகும். இது திருவரங்கம் கோயிலுடன் தொடர்புடைய, அதன் ஆளுகைக்குட்பட்ட கோயில்களுள் ஒன்றாகும். அண்மையில் பதின் மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கிரந்த எழுத்துக் கல்வெட்டொன்று இக்கோயிலில் இக்கட்டுரையாசிரியராலும், திரு. அப்துல் மஜீதாலும் கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கோயில்பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றிற்காக இக் கோயிலைப் பார்வையிடச் சென்றிருந்தபோது, கோயிலின் முன்மண்ட பத்தில் வடக்குப்புற வாயிலின் இடப்புறமுள்ள சுவரில், அடர்த்தியான சுண்ணும்புப் பூச்சில் இக்கல்வெட்டு மறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடன் இவ்விடம் தூய்மை செய்யப்பெற்று, கல்வெட்டும் படியெடுக்கப்பட்டது. இக் கல்வெட்டின் இரண்டாம் பகுதி சிதைந்தும் எழுத்துகள் தேய்ந்தும் அழிந்த நிலையில் காணப்படு கிறது.

கிரந்த எழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டைக் கிரந்தம் படிப்பதில் வல்லவரான வடமொழி அறிஞர் ஒருவரின் துணையுடன் படித்தறிந்தபோது இக்கோயிலைப்பற்றிய வரலாற்று உண்மைகள் தெரிய வந்தன.

அரசர்களுள் சிறந்த சோமேசுவர மன்னன், குருவின் நலத்திற்காக இக் கோயிலுக்கு நிலக்கொடையளித்த செய்தியும், இக் கோயிலில் நரஹரி தேவரின் திருவடிவம் சோமேசுவர தேவனால், சிம்ம கிருஷ்ண அனந்த நாராயணன் என்பவரால் எழுந்தருளுவிக்கப்பட்ட செய்தியும் இக் கல்வெட்டிலிருந்து பெறப்படும் உண்மைகள்.

இந்தச் சோமேசுவர மன்னன் ஒய்சளப் பரம்பரையைச் சேர்ந்த வீரசோமேசுவரனாக இருக்கலாமென்று எண்ணுகிறேன். இம் மன்னன் சமயபுரத்துக்கு அருகிலுள்ள கண்ணனூர் என்னுமிடத்தில் கட்டியுள்ள அருள்மிகு போசளீசுவரர் ஆலயமும் மாடக்கோயிலைப் போன்ற அமைப்புடையது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

காட்டழகிய சிங்கர் கோயிலைப்பற்றிய எந்த ஒரு வரலாற்றுப் பின்னணியும் இல்லாத நிலையில் இக் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. கோயிலின் தோற்ற வரலாற்றைக் கூறவல்ல இக் கல்வெட்டினால் போசளர்கள் தமிழ்மண்ணில் கொண்டிருந்த ஆதிக்கமும், அவர்களது சமயப் பொதுநோக்கும், தமிழர் கலைமுறையைப் பின்பற்றுவதில் அவர்கள் காட்டிய ஆர்வமும் பெறப்படுகிறது.

புலிவலம் அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயிலில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டில், 'முள்ளிக்கரும்பூர்' என்ற ஊரின் பெயர் குறிக்கப்பட்டிருந்தமையால், அவ்வூரைப் பார்க்கும் ஆவல் பிறந்தது. அதன் விளைவாக என் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளிடம் அவ்வூரைப்பற்றித் தகவல்கள் சேகரிக்க முயன்றபோது, ஒருவர், அவ்வூரிலிருந்தே வந்தவர், அங்கு ஒரு பாழடைந்த சிவன் கோயில் இருப்பதாகக் கூறினர். உடன் முள்ளிக்கரும்பூர் சென்று அக் கோயிலைப் பார்வையிட்டேன்.

பாதிக்கும் மேலாகப் பூமியில் புதைந்துகிடக்கும் முள்ளிக் கரும்பூர் சிவன் கோயில், அழகான கட்டுக் கோயிலாகும். தெற்குப் பார்த்த வாயிலுடன் கூடிய இக்கோயிலின் கருவறை, கிழக்குப் பார்த்த நிலையில் உள்ளது. கருவறையில் இருந்த இலிங்கத் திருமேனி இப்போது அங்குள்ள இடிபாடுகளுக்கிடையில், மணல்மேட்டில் புதைந்திருக்கலாம் என்று ஊர்மக்கள் கருதுகிறார்கள். கருவறை விமானம் பாதிக்குமேல் சிதிலமாகிச் செங்கற் குவியலாய்க் காட்சி யளிக்கிறது. இக் கோயிலைச் சுற்றிலும் கல்லும் மண்ணும் மேடாய் மண்டியுள்ளது. இங்குக் கோயிலின் தூண்களும் கட்டுமானக் கற்களும் பரவலாகச் சிதறியுள்ளன.

இக்கோயிலின் தென்புறச்சுவரில் முதலாம் குலோத்துங்க சோழனின் 'புகழ் மாது விளங்க செயமாது விரும்ப' என்ற மெய்க் கீர்த்தியுடன் கூடிய ஏழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு,

எழுத்துகள் பொரிந்த நிலையில் சிதைவுற்றுக் காணப்படுகிறது. இக் கல்வெட்டைத் தொடர்ந்து படிக்கமுடியாத நிலையில், இடையில் இரண்டு கற்கள் பெயர்ந்து விழுந்துள்ளன. இக் கற்களிலுள்ள தொடர்களையும், சுவர்களிலுள்ள கல்வெட்டுப் பகுதியையும் படியெடுத்து இணைத்துப் படிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இக் கோயிலின் அடித்தளத்தைச் சுற்றியுள்ள இடிபாடுகளை ஓரளவு அகற்றியதில் மேற்குப்புறத் தாங்குதளத்தில் கல்வெட்டுத் தொடர்கள் இருப்பதை நான் கண்டேன். இங்குள்ள கல்வெட்டுகள் முழுவதுமாகப் படிககப்பட வேண்டுமானால், இடிபாடுகளை அகற்ற வேண்டும். இது தனி மனிதனால் ஆகக்கூடியதன்று. அதனால், இச் செய்தி தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் முயற்சி மேற்கொண்டால் இக் கோயிலின் முழுவரலாற்றையும் அறியமுடியும்.

இதுவரை படியெடுக்கப்படாத சில புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு, படிக்கப்பட்டும் படியெடுக்கப்பட்டும் இருக்கும்நிலை இக்கட்டுரையால் பெறப்பட்டது. இதுபோல் இன்னும் பலநூறு கல்வெட்டுகள் படிக்கப்படாமல் உள்ளன. தமிழ்த்துறைப் .பெருமக்களும் வரலாற்றுத்துறைப் பெருமக்களும் இணைந்து முயன்றால் பல கலவெட்டுகள் கண்டறியப்பட்டு வெளிககொணரப்படலாம். தமிழகத்தின் வரலாறும் புதுமுறையில் ஐயங்களுக்கிடமின்றி அமையக்கூடும்.

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் கதிர் விழா

8-11-83 செவ்வாய் மாலை 6 மணிக்கு, சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 85ஆம் பிறந்தநாள் விழா (கதிர் விழா) சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

தமிழ்ச் சான்றோர் காந்தியச் செம்மல் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கி முத்தமிழ்க் காவலர்க்கும், அவர்தம் துணைவியார்க்கும் பொன்னாடைகளைப் போர்த்திச் சிறப்பித்தார்.

'அருட்பா அரசு' திரு. நா. கிரிதாரி பிரசாத், 'தாய்' வார இதழ் ஆசிரியர் திரு. வலம்புரிஜான் எம். எல். சி., திருமதி நிர்மலாசுரேஷ் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர், ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத் தலைவர் டாக்டர் ஔவை. நடராசன் அவர்கள் வரவேற்பும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. 'சிலம்பொலி' சு. செல்லப்பன் நன்றியும் கூறினர். சென்னை நகர்வாழ் தமிழ் அறிஞர் பலரும் விழாவிற்குத் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்!

[பவானிசாகர் பெரு. தமிழ்வேந்தன்]

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் இமிழ்திரைக் கடல் சூழ் தமிழகத்தின் கண்ணே முற்காலத்தே வாழ்ந்த கற்றுத்துறை போகிய நற்றமிழ்வல்ல நன்மக்கள் பழுமரந் தேரும் பறவைக ளொப்பப் பல்வேறு நாடுகட்குஞ் சென்று அவ்வந்நாட்டு மாந்த ரொடு இனிது கலந்து பழகி மகிழ்ந்தனர். அவ்வழி, அன்னார் தம் அறிவை மேலும் விரிவாக்கி இக் குமுகாய மேம்பாட்டிற்கு, பண்பட்ட இன்ப அன்பு வாழ்க்கைக்கு நெறிகாட்ட வல்ல அரிய அழியாப் பனுவல்கள் பல ஆக்கிப் போந்தனர். தத்தம் நாட்டையே உலகமெனக் கருதுங் குறுகிய நோக்கொழித்து, விரிந்து பரந்த இவ் வியனுலகையே வீடெனக் கருதும் உயர்ந்த நோக்குடையராய் வாழ்ந்தனர்.

அத்தகு வாழ்நிலையிலேயே ''எல்லாரும் ஓர் குலம்'' ''எல்லாரும் ஓரினம்'' முதலாய முதுமொழிகள் முகிழ்த்தன. இன்னபிற இனிய மொழிகளைக் கண்ணுறுங்கால் நம் அருமைத் தமிழ்ச் சான்றோர் தம் பண்பாடு உயர்ந்த நோக்கு, போக்கு, எல்லா ஊரையுஞ் சொந்த ஊராகக்கருதி வாழ்ந்த கவினுர்ந்த வாழ்க்கை, அவ்வவ்வூர் மாந்தரை உறவினராகக் கொண்டொழுகிய உயர்வுள்ளம் முதலியன இனிது புலனாகும்.

இன்றும், நம் கழகப் பனுவல்களைக் கற்குங்கால பிறநாட்டா ரைக் காட்டினுந் தமிழ்நாட்டார் அலைகடலுக்குமப்பால் வதிந்த நன் மக்களொடு வேற்றுமையின்றிக் கலந்துறவாடிய வெள்ளையுள்ளம் கன்மேல் எழுத்துப்போல் கசடறத் தெரிதரும்.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்!'' எனச் சொல்லுதல் எளிது. அதனைச் செயல்முறையில் நிகழ்த்திக் காட்டுதற்காம் நெறிகளைத் தெளிந்து சொல்லலரிது. செயற்கரிய அச் செயலைப் புலவர் பூங்குன்றனாரது செய்யுள் செவ்வனே தெளிவுறுத்துகின்றது. துன்பத்துக்கு அஞ்சி அஞ்சிச் சாகிறோம். இன்பந்தேடி அலமரு கின்றோம். இன்புறுங்கால் இனிது மகிழ்கிறோம். இன்ப விருப்பும், துன்ப வெறுப்பும் உள்ள மனத்தில் நண்பர், பகைவர் என்ற உணர்வு களும் இடம்பெறுகின்றன. இன்பம்பெற்றுத் துன்பமற்ற வாழ்வும், துன்பம் பெருகி இன்பமிலா வாழ்வும் எங்கும் எவர்க்குமில்லை.

> "இன்பம் விழையான் இடும்பை யியல்பென்பான்
> துன்ப முறுத லிலன்"

எனுங் குறுவெண்பாட்டுப் பொருளுரையினை நன்குணரும் மாந்த னுக்கு, 'யாது மூரே; யாவருங் கேளிர்!'

எங்கோ திரள்கின்றது எழிலி. ஏதோவோரிடத்தில் மழை பொழிகின்றது. எங்கிருந்து எங்கு வந்துற்றோம் என உணரவியலாத் தண்ணீர் பெருக்கெடுத்துக் கற்களை அலைத்துக்கொண்டு ஆருய்ப்

பரந்தோடுகின்றது. அவ்வாற்றிலே ஒரு மிதவை நீரின் போக்கிலே இயங்குகின்றது. இதுவே நம்முயிர்ப் பயணம். எங்கோ, என்றோ எவ்வாறோ என்றுணரவியலாக் காலவெள்ளப் பரப்பிலே ஆழமறிய வொண்ணு 'ஊழ்' என்னும் பெருக்கிலே ஒரு சிறு மிதவையாய் இயங்குவது நம்முயிர். ஊழ் இயக்கம் தனிவாழ்வின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தவல்லது. அங்கே 'நான்', 'நீ' என்பதற்கோ 'பெரியர்', 'சிறியர்' என்பதற்கோ இடமில்லை. ஊழ்வழிப்பட்டு இயங்குவதே உயிர் எனவும் அங்குப் பெருமை சிறுமை என்ற வேற்றுமையில்லை எனவுமுணர்ந்து வாழும் உயிர்க்கு ஏற்றமுந் தாழ்வுமில்லையாதல் தேற்றம். அவ்வுயிர்க்கு, யாது மூரே, யாவருங் கேளிர்!

ஈண்டோர் ஐயமெழுதல் இயற்கை. சிறியோரை இகழா திருக்கலாம்; ஆயின், செயற்கரிய செய்யும் பெரியோரை வியவா திருத்தல் இயலுமோ? என்று ஐயுறுதல் கூடும். பெருமை சிறுமை வேறுபாடுகளுமற்றுக் காண்டலே கற்றறி புலவோர் காட்சி எனக் குறித்த பூங்குன்றனார் பெரியோர், சிறியோர் இலர் என்றாரல்லர். நன்மையுண்டு; தீமையுமுண்டு; எனினும் நன்மையை இனியவர் செய்தார்; தீமையைப் பகைவர் செய்தார் என வெண்ணும் இன்னாத எண்ணத்தையே ஒறுத்தல்வேண்டும். அதற்கு வழி, நன்மையுந் தீமையும் இயற்கையில் வருவன என்றுணர்வதேயாம்.

பெரியார் சிலர் செயற்கரிய செய்து உலகை மாண்புறுத்தி யிருக்கலாம்; சிறியார் பலர் செய்தக்க செய்யாதொழிந்து உலகுக்குப் பழியூட்டியிருக்கலாம். பெரியார் செயலைப் போற்றும் மனம் விருப்புக்கு இடனளிக்கின்றது. விருப்பு இடம்பெறும் மனத்தில் வெறுப்பு வேர்விடுதல் இயற்கையே. 'அல்லி நல்லள்' எனப் புகழும் மனம் 'வள்ளி தீயள்' எனப் பழிக்கவும் முந்துறும். பெரியாரை வியந்து போற்றும் விருப்பும், சிறியாரை இகழ்ந்து தூற்றும் வெறுப்பும் ஊழின்வழி இயங்கும் உயிர்ப்பயணத்திற்குத் தடைக் கற்களாம். போற்றலும், தூற்றலுமுள்ள இடத்தில் ''யாது மூரே, யாவருங் கேளிர்'' என்ற ஒற்றுமையுணர்வு அரும்புதலருமை. ஆனதுபற்றியே, 'பெரியோரை வியத்தலு மிலமே; சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே' எனப் புகன்றார் பூங்குன்றனார்.

> *"யாது மூரே; யாவருங் கேளிர்!*
> *. தீதும் நன்றும் பிறர்தர வாரா"*

எனத் தொடங்கும் புலவர் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் சமயங்களின் சாரமாய் வாழ்வின் விளக்கமாய், உணர்வின் பனிமலை யாய் நனியுயர்ந்து விளங்குகின்றது. இவ்வொரு பாடற் பொருளை, உள்ளுறை நயத்தை இக்கால ஞாலம் இனிதுணருமாயின் உயிர் வாழ்க்கை உவட்டாமல் இனிக்குமென்ப தொருதலை. உலக மென்ப துயர்ந்தோர் மாட்டே!

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

(முன் இதழ் ௧௦௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை வேண்டல் :

நம் சமுதாயக் கேடுகளுக்கு மற்றுமொரு தலைக்காரணம் ஒற்றுமை இன்மை ஆகும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று இதனை நீக்குதற்கு வழிகோலுவான் பாரதி. நம்மிடையே உள்ள பிரிவினை மனப்பான்மையையே தங்கட்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டனர் வேற்று நாட்டவர். வேற்றுமைப்பட்ட உணர்வுகளே வழியாக மெல்ல உள்ளே புகுந்தது மட்டுமின்றி, அந்த வேற்றுமை உணர்வுகளை நிலையாக வைத்திருப்பதற்கு எத்துணை முயற்சிகள் உண்டோ அவை அத்தனையையும் மேற்கொண்டனர். ஒன்று பட்டிடாதபடி சமுதாயத்தின் பிளவு மனப்பான்மையைத் தம் சூழ்ச்சிகளால், பெரிதாக்கினர் ; இந்த அடிப்படையிலேயே தம் ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தனர். இதனைக் காண்கின்றான் பாரதி. இந்த நாட்டு மக்களின் அறியாமையன்றோ இந்த ஒற்றுமை யின்மைக்கு அடிப்படை என்று கருதுகின்றான். 'இதனை முளையி லேயே கிள்ளி எறிந்திட வேண்டும்: அப்போதுதான் இந்தச் சமுதாயம் விடுதலை பெறும்' என்று அழுத்தமாக உணர்கின்றான். தன் சிந்தனை முத்திரையை ஆத்திசூடியிலே,

"ஒற்றுமை வலியாம்"

என்று பதிக்கின்றான். இதன் விரிவைப் பாரதியின் கவிதைகளிலே பல்வேறு இடங்களிற் காண்கின்றோம் ; 'கூடித்தொழில் செய்" என்ற போதும், தொழில் வளம் காண்பதற்கும் கூட்டுறவாகிய ஒற்றுமை வேண்டும் என்றே வற்புறுத்துகின்றான் !

'வந்தே மாதரம் என்போம்" என்று வாயார முழங்கிய அதே வேளையில்,

"எப்பதம் வாய்த்திடுமேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும் !
முப்பது கோடியும் வாழ்வோம் !—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் !"

என்று சிங்கமெனச் சீறிச் செந்தமிழால் முழக்குகின்றான். நமக்குள்ளே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் வரலாம்; அவற்றை நாடு தழுவிய ஒருமைப்பாடு என்ற நோக்கில் மறந்து ஒன்றுபட வேண்டும் என்று ஒற்றுமைக்குரல் கொடுக்கின்றான் நம் தேசிய கவி :

"ஓர், தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முள்
சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ ?"

என உணர்த்துகின்ற திறம் நம் கவிஞனுக்கே உண்டு. எங்கள் இந்திய அன்னைக்கு, "முப்பது கோடி முகங்கள் : உயிர் ஒன்று. செப்பு மொழி பதினெட்டு ; ஆயினும் சிந்தனை ஒன்று" என்று பாடி ஒற்றுமைப்பட்ட வாழ்வை உயர்கவிதை ஆக்கும் புத்துலகக் கவிஞன் இவன்.

"அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்!—தனைச்
செறுவது நாடி வருபவரைத் துகள்
செய்து கிடத்துவள் தாய்!"

என்று பாடிப் பரவசமாகின்றான் இந்த ஒருமைப்பாட்டுச்சிற்பி. தாயின் மணிக் கொடியின் கீழே நிற்கும் பாரத நாட்டு மக்கள் திருக்கூட்டத்தைத் தன் கவிதையிலே ஒன்றுபடுத்துகின்றானே நம் பெருங் கவிஞன்! அந்த வரிகளுக்கு இணையாக இன்னும் தமிழ்க் கவிதை தோன்றியதாகப்படவில்லை; இதோ அந்தப் பட்டியல்; ஒன்றுபட்ட பாரதப் புதல்வரின் உயரிய அணி இது!:

"செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
சேவடிக்கே பணி செய்திடு துளுவர்!"

"கன்னடர், ஒட்டிய ரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்!
பொன்னகர்த் தேவர்கள் ஒப்ப—நிற்கும்
பொற்புடையார் இந்துஸ் தானத்து மல்லர்!"

"மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில், மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்!", "பஞ்சநதத்துப் பிறந்தோர்," "துஞ்சும் பொழுதினும் தாயின் பதத், தொண்டு நினைந்திடும் வங்கத்தினோர்"— என்று தெற்குக் கோடி முதல் வடக்குக் கோடி வரை உள்ள பாரத மக்களை ஒன்றுபட்ட சிந்தையராக்கி உவகை கொள்கின்றான், புத்துலகக் கவிஞன்!

"ஒற்றுமையே நம் ஆற்றல்" என்பதை நம் பெருங்கவிஞன் விளக்கிய திறமோ பெரிது ; சாதிப்பிரிவினைகள், சமயப் போர்கள்,

முதலிய வேற்றுமைகளையும், மொழி வேறுபாடுகளையும் மறந்து, 'இந்த நாடு ஒன்று; இந்த நாட்டின் பண்பு ஒன்று; இந்த நாட்டின் ஆட்சி ஒன்று' என்று சிந்தித்து முன்னேற வேண்டும் என்பதே நம் கவிஞனின் தனிப்பெருஞ் செய்தி!

சமயப் பொறையின் சால்பு:

சுதந்திரம் பெறவேண்டுமானால், சாதிச் சண்டை, சமயச் சண்டை முதலிய அனைத்தும் சமுதாயத்தைவிட்டு அறவே நீங்க வேண்டும் என்று ஆங்கிலேயன் கூறுவதாகப் பாடும் பகுதிகளிலும் ஒற்றுமையை வற்புறுத்தும் உள்ளத்தைக் காண்கின்றோம்:

"ஒற்றுமை பயின்றுயோ?—அடிமை!
உடம்பில் வலிமையுண்டோ?
வெற்றுரை பேசாதே!—அடிமை!
வீரியம் அறிவாயோ?"

"சேர்ந்து வாழுவீரோ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ?—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ?"

என்றெல்லாம் அன்னியன் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றுனும்! மிகச் சாதாரணமான செய்திகளுக்கெல்லாம் மனப் பிளவு கொள்வதும், வேறுபட்டு வாழ்வதும், ஒற்றுமை இழப்பதும், எல்லாச் சமயங்களும் இறைவனை அடையும் வழிகளே என்று உணராது தம்முள்ளே போராடிப் போராடி வீழ்வதும் ஆக இருந்த சமுதாய நோயைக் கண்டு பாரதி மனம் நொந்தான்; அதுவே 'இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால், நெஞ்சு பொறுக்குதிலையே' என்று பாட வைக்கிறது இப் பாவலனை:

"கொஞ்சமோ பிரிவினைகள்?—ஒரு
கோடிஎன்றுல் அது பெரிதாமோ?"

எனக் கேட்கும் இம் மக்கட் கவிஞன், அதற்கோர் எடுத்துக்காட்டும் அடுத்துக் கூறுகின்றுன்:

"அஞ்சுதலைப் பாம்பென்பான்—அப்பன்;
ஆறுதலையென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்!"

எவ்வளவு எளிமையாக இந்த நாட்டு மக்களின் பகுத்தறிவில்லாப் பான்மையைச் சுட்டிவிட்டான், பாரதி! மேலும், சைவ வைணவ அன்பர்களின் வெறிச் செயலை,

"ஆத்திரங் கொண்டே இவன் சைவன்—இவன்
அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடுவார்!"

என்று விளக்கிவிடுகின்றான்! மனிதர்களை ஒன்றுபடுத்தி உயர்த்த வேண்டிய சமயங்கள் பிரிவினைக்கும் போராட்டத்திற்கும் வித்திட்டால் அதைக் கண்டிக்காமல் இருக்க முடியுமா? சமயப் பொறை உயர்ந்த சான்றோர்களுக்கு இயல்பாக இருக்கக் காண்கின்றோம்; திருநாவுக்கரசர் பாடுகின்றார்:

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்!"

இவ்வாறே பாரதியும் ஒரே தெய்வம் என்ற கோட்பாட்டில் நின்று ஒன்றுபட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றான்:

"சுத்த அறிவே சிவம் என்று கூறும்
சுருதிகள் கேளீரோ?—பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமை அழிவீரோ?"

இந்த இலக்கியச் சொற்பொழிவிலே முதற்கண் குறித்த ஆத்தி சூடிப் பரம்பொருள் வாழ்த்து, பாரதியின் ஒற்றுமைக் கோட்பாட்டிற்கு உரியதாக விளங்குகின்றது. ஆத்தி மலரைச் சூடி இளம் பிறையை அணிந்து மோனத்தில் இருக்கும் வெண்ணீறு அணிந்த சிவபிரான், பாற்கடலில் பள்ளி கொள்ளும் நாராயணன், மகமது நபிக்கு அருள் புரிந்த அல்லா, பரமண்டலத்திலிருக்கும் ஏசுவின் தந்தை—ஆகப் பல மதத்தினர் பல வடிவங்களிற் பரவிடும் பரம் பொருள் ஒன்றே என்று தெள்ளத் தெளிவாக உணர்த்திவிட்டுத்தான் ஆத்தி சூடியைத் தொடங்கியிருக்கின்றான் பாரதி. சமத்துவம் என்பது சமய நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று என்பது இவ்வுயர் கவிஞனின் நோக்கம் என்றால் அது மிகையாகாது.

"தெய்வம் பலப்பல சொல்லி—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்!
உய்வதனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொருளானது தெய்வம்!"

என்று வெளிப்படையாகவே, முரசு கொட்டி இந்த உண்மையைப் பாரத சமுதாயத்திற்கு வெளிப்படுத்தி அந்த வகையில் விழிப் புணர்வைத் தூண்டுகின்றான் நம் புதுநெறிப் புலவன். வேண்டாத சண்டைகளைத் தம்மிலே உண்டாக்கிக்கொண்டு, நாட்டின் பண்பாட்டைக் கெடுப்பது வேண்டா என்று புத்தி புகட்டுகின்றான்:

"*தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்*
திக்கை வணங்கும் துருக்கர்

கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்

''யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்''

என்று முரசு கொட்டிச் சமுதாயத்திற்கு அறிவுறுத்துகின்றான் நம் தேசீய கவி. ஆகவே மதத்தால், வேறுபடாது, பரம்பொருள் உணர்வால் ஒன்றுபட்டு விழிப்புணர்வு பெறுமாறு அக்காலச் சமுதாயத்திற்கு நெறி காட்டி நிற்கின்றான் இப்பெரும் புலவன். இவ்வாறே சாதிப்பாகுபாட்டினையும் நீக்கி மானுடர்க்குள் வேற்றுமை இல்லை என்றும் முரசு கொட்டுகின்றான் :

''வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை இல்லை !
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்''

என்றும்,

''*நிகர் என்று கொட்டு முரசே !—இந்த
நீணிலம் வாழ்பவர் எல்லாம் !
தகர் என்று கொட்டு முரசே !—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம் !*''

என்றும் வரும் பாரதியின் கவிதை முத்திரைகள், சமுதாய சமத்துவ உணர்விற்கு வித்திட்ட வேத வாக்கியங்கள் எனலாம்.

புதுமை விழையும் பொற்பு :

இனி, ஆத்திசூடியின் மற்றோர் ஆணித்தரமான வாசகம் ''புதியன விரும்பு !'' என்பது. புதுமை பாரதி விழைந்த ஒன்று; புதுமைப் பெண்ணை அவன் உருவாக்கி அறிமுகப்படுத்துகின்றான். பழமை, பழமை என்று அதிலேயே ஊறி, மாறிவரும் புதிய உலகைக் கண்ணெடுத்தும் பாராத மாந்தர்க்குப் புதிய ஒளியைக் காட்டுகின்றான் ! புதியனவற்றை விரும்பத் தொடங்குதல், புதியன காணும் அவாவினைத் தோற்றுவிக்கும்; அந்த அவா புதிய முயற்சியை உண்டாக்கும்; அந்த முயற்சி பல நல்ல விளைவுகளை உண்டாக்கும் என்பது அப்புதுமைப் புலவன் கணிப்பு. ''சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது; சொற் புதிது; சோதி மிக்க, நவகவிதை; எந்நாளும் அழியாத மா கவிதை'' என்று தன் கவிதையைத் தானே விமரிசனம் செய்யுமளவிற்குத் தன்னம்பிக்கை

மிக்க புதிய புலமை அவனுடையது! அவனது புதிய பேரறிவு கண்ட கவித்துறைகளும் எண்ணற்றவை. அவையனைத்தும் அவனுடைய புதுமை வேட்கையை இனம் காட்டுகின்றன என்று கூறலாம். பாரதி படைத்த வசன கவிதைகள் உணர்வு மயமான கவிதைப் பூக்கள்; அவற்றுள் கற்பனையும், நுட்பமான உணர்வுகளும் குமிழியிடுகின்றன. அந்த வடிவம் புதியது; இனியது. மரபுக்கு அப்பாற்பட்டதுதான். ஆனால், கவிஞனின் புதுமை வேட்கை இந்தச் சமுதாயத்திற்குத் தந்த எண்ணற்ற பரிசுகளுள் வசன கவிதையும் ஒன்று.

பாஞ்சாலி சபதம் — பாரதியின் காப்பியம்; அது பாரதம் புதுமை செய்த கவிஞனின் கூரிய நோக்கையும் உட்கோளையும் உடையது. வில்லி பாரதத்தில் இல்லாத துள்ளலும் துடிப்பும் இப் பெருங்கவிஞனின் காப்பியத்திற்கு உயிர் கொடுக்கின்றன. பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதி எழுதிய முகவுரையில் அவனது இதய தாகம் புலனாகின்றது: "எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமதுதாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்," என்று எழுதும் நம் தேசிய கவியின் முகவுரை இப்படி முடிகின்றது: "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணம் கட்டிநிற்கும் பராசக்தியே என்னை இத் தொழிலிலே தூண்டினாளாதலின் இதன் நடை நம்மவர்க்குப் பிரியம் தருவதாகும் என்றே நம்புகின்றேன். ஓம் வந்தே மாதரம் — சுப்பிரமணியபாரதி." தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒலியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக்குப் பாஞ்சாலி சபதத்தைப் பாதகாணிக்கையாகச் செலுத்துவதாக முதற்பாகப் பதிப்பில் பாரதி மொழிந்துள்ள வரிகளைப் பார்க்கும்போது, அவனது புதுமை வேட்கையும் புதுமைப் படைப்பிலக்கியங்களின்மீது அவனுக்குள்ள அளவற்ற காதலும் வெளியாகின்றன அல்லவா? "புதியன விரும்பு!" என்று ஆணையிட்ட இப் பெருங்கவிஞனின் இதயம் புதுமை புதுமை என்றே துடித்துக் கொண்டிருந்தமைக்கு இஃது ஒன்றே சான்றாகும்.

சமுதாய விழிப்புணர்விற்குப் பழமைப்பற்று விலகுதலும் புதுமை வேட்கை விளைதலும் ஆகிய இரண்டும் இன்றியமையாத் தேவைகள் என்பது பாரதிக் கோட்பாடு.

(தொடரும்)

———

அருளானந்தக் கடல் அமுது

[க. சி. கமலையா]

முருகன் பெருமை:

வெற்றி வேற் பெருமாள் அடியார்க்கு நல்ல பெருமாள், அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள், நான் என்று மார் தட்டும் பெருமாள் என்றெல்லாம் முருகனை நினைந்து அருண கிரிநாதர் உவப்பார். அவர் முருகனை முழுமுதற் கடவுளாய் வழி பட்டார். முருகன் ஊர்தியும் கொடியும் அணியும் கிண்கிணியும் அவனிடம் கொண்டுள்ள தொடர்பால் பேறும் வீறும் பெறுகின்றன. அழகன் ஊர்ந்து செல்லும் மயிலின் தோகை அசைந்தது. அசை வின் விளைவு என்ன ?

"குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின் கொத்து
அசைபடு கால்பட்டு அசைந்தது மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்ப்பட்டதே!"

[கால் - காற்று]

மயிலின் தோகையால் அசைபட்ட காற்றின் வேகம் மேருவை அசைத்தது. மலையின் அசைவால் கிளம்பிய தூசு திசையெங்கும் பரவிக் குன்றென நின்றது. முருகன் கொடியை அணி செய்யும் சேவல் அதன் திறனைக் காட்டுகிறது. சேவல் சிறகடிக்கச்,

"சலதிகிழிந்து
உடைபட்டது அண்டகடாகம் உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே."

மாமன் திருமால் வலம்புரிச் சங்கோசை வானம்வரை கேட்டது. மருகன் முருகன் கிண்கிணியோசை ஏழேழுலகமும் கேட்டது.

"மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரிஓசை அந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது, வேல் எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையில்
கிண்கிணி ஓசை பதினாலு உலகமும் கேட்டதுவே."

சிற்றின்பமும் பேரின்பமும்:

சிற்றின்ப உலகிலிருந்து விடுபட்டுப் பேரின்ப வெள்ளத் தழுந்த அருணகிரிநாதர் விரும்பினர். திருப்புகழ்ப் பாடல்களில் பெரும்

பாலும் ஒவ்வொரு பாடலிலும் செம்பாதி சிற்றின்ப வாழ்க்கையைச் சுவைபட உரைத்து அதினின்றும் தனக்குப் பேரின்பம் நல்க அருளுமாறு முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார். அலங்காரத்திலும்

"பாலேயனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றி என்றும்
மாலே கொண்டு உய்யும் வகையறியேன், மலர்த்
தாள் தருவாய்"

என்றும் முருகனை மருவுகிறார்.

"சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரம் சேர எண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல்"

முருகன் பூங்கழல் நோக்கு நெஞ்சே எனத் தம் நெஞ்சுக்கு அறிவுரையை அவர் வழங்குகின்றார்.

இசையும் இனிமையும்:

அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களின் இசையில் மக்கள் மனத்தைப் பறிகொடுத்து நிற்கின்றனர். அவருடைய விருத்தப் பாடல்களிலும் இசைபற்றிய அவரின் ஈடுபாடு புலப்படுகின்றது. கந்தரலங்காரப் பாடலொன்றில் கொட்டின் இசையொலிக் குறிப்பொன்றை அவர் கையாள்கிறார். சிற்றின்பத்தில் திளைத்தாலும் வேல்மறவேன் என்று பொருளமைந்த பாடல் வருமாறு:

"கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மறவேன், முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டு டுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற
ராவுத்தனே."

இசையலை புரளுமாறு பாடுவதிலும் அருணகிரிநாதர் வல்லவர். வல்லின மெல்லின எழுத்துகளைப் பிணைத்து இன்பவொலியைப் பாடல்களில் எழுப்புவதிலும் அவர் திறன் படைத்தவர்.

"தொண்டர் கண்டு அண்டி மொண்டு
உண்டிருக்கும் சுத்த ஞானமெனும்
தண்டையம் புண்டரீகம் தருவாய்
கண்ட தண்ட வெஞ்சூர்
மண்டலம் கொண்டு பண்டு அண்டர் அண்டம்
கொண்டு மண்டி மிண்டக்
கண்டுருண்டு அண்டர் விண்டு ஓடாமல்
வேல் தொட்ட காவலனே."

சொல்லாட்சி:

பாடல்களில் வரிகளின் தொடக்கத்தில் எதுகை வருவதுண்டு கந்தரலங்காரப் பாடல்களும் விதிவிலக்கன்று. அது தவிரப் பாடல் அடிகளின் இடையிலும் எதுகைச் சொற்களை அமைத்துப் பாடுவதில் அருணகிரிநாதர் விருப்பமுள்ளவர். குவித்துக் கவித்து, திருகிப் பருகி, அம்பரம் பம்பரம், கரியில் பரியில், ஆறு கூறு, கவுரி பவுரி, வடிவும் முடிவும், தெண்டையைத் தொண்டையை, வற்றச் செற்ற, உகம் போய்ச் சகம் போய் என்றெல்லாம் எதுகைகளைக் காணலாம் சிலேடைச் சொற்களிலும் அருணகிரிநாதருக்கு நாட்டமுண்டு.

"காலே மிகவுண்டு காலேயிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன் மருக"

என்ற வரிகளில் காலே மிகவுண்டு (காற்றையே மிகவுண்டு) காலேயிலாத கணபணத்தின் (கால் இல்லாத பாம்பின்) என்ற இருபொருளில் கால் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். 'வேலையில் வேலைவிட்டோன்' என்ற சொற்றொடரில் கடலில் (வேலை) வேல் என்ற ஆயுதத்தை (வேல் + ஐ) விட்டோன் என்றும் அவர் பாடுகிறார்.

முத்திக்கு வழி:

உடம்பை ஒறுத்து, மூச்சைப் பிடித்து அல்லலுறும் யோகிகளுக்கு முத்தியெய்தும் வழியை அருணகிரிநாதர் உரைக்கிறார். சித்தத்தை மெத்தவும் முருகனடிகளில் பதித்தாலே போதுமே! ஏதுக்கு இந்த வேதனையெல்லாம்?

"துருத்தி யெனும்படிக் கும்பித்து வாயுவைச்சுற்றி முறித்து
அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னும்? சிவயோகம் எனும்
குருத்தை அறிந்துமுகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும்கண்டீர், முத்தி கைகண்டதுவே."

எளிய, இனிய, நேர்பாதையிற் செல்லாமல் ஏன் இந்த அல்லலெல்லாம் என்றும் மனம் நொந்து அருணகிரிநாதர் வருந்துகிறார்.

"காட்டில் குறத்தி பிரான்பதத்தே கருத்தைப்புகட்டின்
வீட்டில் புகுதல் மிகஎளிதே, விழி நாசிவைத்து
மூட்டிக் கபால மூலாதார நேர்அண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்துஎங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே."

சொல்லோனுப் பேரின்பம்:

மக்கள் நாவில் தவழும் பழமொழிகளை—பழகு மொழிகளை—அருணகிரிநாதர் மறந்தவரல்லர். 'வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்', 'செல்வமெல்லாம் நீரில்பொறி', 'நீர்க் குமிழிக்கு நிகர் என்பர் யாக்கை' என்றெல்லாம் அவற்றைத் தம் பாடல்களில் அவர் கையாள்வர். 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே' என்ற பட்டினத்தார் வாக்கை நினைவிருத்

திக் 'கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே' என்று அருணகிரியார் சொல்வார்.

"காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்
தூவிக் குலமயில் வாகனனே துணையேது மின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே"

என்று ஏங்குகிற்கும் அடியாரை முருகன் தன் வயத்தே கொண்டால் எவ்வாறிருக்கும் அந்நிலை? அவரே உரைக்கக் கேட்போம்.

"போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லாது ஒன்று வந்துவந்து
தாக்கும் மனோலயம் தானே தரும்எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணாது இந்த ஆனந்தமே."

ஆடிப்பாடி மகிழவைத்தவர் :

பிறரிடம் காணும் குறைகளைத் தம் மேலேற்றிப் பாடும் வரிசையைச் சேர்ந்தவர் அருணகிரிநாதர். அவருடைய காலம்வரை நிரம்பி வழிந்த பக்தி இலக்கியம் அவரைப் பெரிதும் ஆட்கொண்டிருக்க வேண்டும். ஆழ்வார்கள்—நாயன்மார்களுடைய பாடல்களின் கருத்தாழமும் இலக்கியச் செறிவும் அதே தரத்தில் அருணகிரிநாதரின் பாடல்களில் உள்ளன என்று சொல்லமுடியாது. மக்களிடை கலந்து வாழ்ந்தவரெனினும் அப் பெரியார்கள் இயற்கையின் எழிலையும் எண்ணத்தின் உச்சியையும் எட்டிப் பிடித்து இலக்கிய வானில் உலவியவர். எனினும் மக்களைக்கூட்டி ஒருசேரப் பாடி ஆடி உளமகிழ வைத்தவர் அருணகிரிநாதர். முருகவழிபாடு மக்களைத் தொன்று தொட்டுக் கவர்ந்தது. அதற்கு உறுதுணையாக அருணகிரிநாதரின் பாடல்கள் அமைந்தன வெனலாம். வடமொழிச் சொல்லாட்சியை ஆங்காங்கு புகுத்தியதென்னையோ வெனின் வடமொழியே தஞ்சமென்றிருந்தவரையும் ஒன்று சேர்க்க அவர் செய்த முயற்சியெனக் கொள்ளலாம். மணிப்பிரவாள நடையினரின் போக்கை அருணகிரிநாதர் ஓரளவு கடைப்பிடித்தவர் ஆவார்.

தித்திக்கும் அமுது :

"பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல்மாண் டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரைபு ரளும்பர மானந்த சாகரத்தே"

என்று திருமுருகன் உருவில் அருணகிரிநாதர் நெஞ்சைப் பறிகொடுத்தார். எனினும் 'இடுதலைச் சற்றும் கருதேனைப் போதமிலேனை' என்று நொந்து கொள்வதினின்றும் அவர் காலத்து மக்கட்டொகுதியின் குறையினையும் அவர் சுட்டிக்காட்ட மறந்தாரில்லை.

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள்:

ஓர் உண்மை விளக்கம்

[திரு. M. அண்ணாதுரை, M. A., B. Lib. Sc.,
நூலகர், கலைக்கல்லூரி, ஈரோடு.]

பாவேந்தர் பாரதிதாசனின் உண்மையான பிறந்த நாளினைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்துகொள்வது நன்று. அப்பொழுது தான் அவர்தம் உண்மையான வாழ்க்கை வரலாறு சரியாக அமையும். பாவேந்தரின் பிறந்த நாள் 29—4—1891. இவ்வுண்மையான பிறந்தநாள் 27—4—1891;[1] 17—4—1891;[2] 9—4—1892;[3] 18—4—1891[4] என்று தவருகக் கூறப்பட்டும், இதழ்களிலும், மலர்களிலும், நூல்களிலும் தவருக எழுதப்பட்டும் வருகின்ற நிலையினைக் காணலாம். பாவேந்தர் நூல்களை அச்சிட்டவர்களால் செய்யப்பட்ட அச்சுப்பிழைகளைப் பெரிதுபடுத்தியும், அடிப்படைச் சான்றுகளைக் கண்டு உண்மையினை அறியாமலும், பாவேந்தர் பிறந்த நாளினை மேற்குறித்தவாறு சிலர் தவருக வெளியிட்டு வருகின்றனர். பாவேந்தரின் பிறந்தநாள் 29—4—1891 என்று உறுதி செய்வதற்கு இரண்டு அடிப்படைச் சான்றுகள் உள்ளன, 1. பாரதிதாசன் தம் கைப்பட எழுதிய பிறந்த நாள் கடிதம். 2. புதுவை மேரியில் (நகராட்சியில்) உள்ள பிறந்தநாள் குறிப்பேடுகள்.

ஓர் அமையம், தஞ்சை மருதவாணன் அவர்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கட்குத் தவருன பிறந்த நாளினைக் குறிப்பிட்டுப் பிறந்த நாள் வாழ்த்திதழ் அனுப்பி இருந்தார். அவ்வாழ்த்திதழ்க்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் பாவேந்தர் அவர்கள், தம் கைப்பட எழுதிய மடலில், தம்முடைய பிறந்தநாள் 29—4—1891 என்பதே சரியானது என்று எழுதியுள்ளார்கள். அக் கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு ;

''நான் பிறந்த நாள் கர ஆண்டு சித்திரைத் திங்கள் 17ம் நாள். 1891 ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ம் நாள் எனத் தங்கட்கு நினைவு படுத்த எண்ணுகின்றேன்.''

கர ஆண்டு சித்திரைத் திங்கள் 17ஆம் நாள் என்பது ஏப்ரல் 17ஆம் நாள் என்று மற்றவர்களால் தவருகக் கொள்ளப்பட்டுப் பாவேந்தரின் நூல்களிலும், மலர்களிலும் அசசடிக்கப்பட்டு உள்ளது.

இக்கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள, பாவேந்தர் அவர்கள் தம் கைப்பட எழுதிய கடிதத்தை நோக்கிஞல் இவ்வுண்மை புலப்படும்.

பாவேந்தரின் கடிதம் மட்டுமின்றி, புதுவை மேரியில் உள்ள பிறந்த நாள் குறிப்பேடுகளிலும் 29—4—1891 என்றே குறிக்கப் பட்டு இருத்தலையும் உணரலாம்.

மேற்குறித்த அடிப்படைச் சான்றுகளை மட்டுமின்றி, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் இணைந்து நீண்ட நாள்கள் ஆசிரியர் தொழில் செய்த வித்துவான புதுவை மு. மாணிக்கம் அவர்கள். குறித்த ஒரு குறிப்பினையும் காணலாம். அவர் ''பாரதிதாசன் சரித்திர வெண்பா'' என்ற நூலினை எழுதியவர். பாவேந்தரின் பிறந்த நாளினைப்பற்றி அவர் இந்நூலில் எழுதியுள்ள குறிப்பு வருமாறு:

''ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற்றே ராமாண்டில்
ஏயவரும் ஏப்ரலிரு பத்தொன்பான்—தூயநாள்
சுப்புரத்தினச் செம்மல் தோன்றினர் என்றறைவர்
இப்புவியில் வாழ்பெரியோ ரே''[5]

எனவே, பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள் 29-4-1891 என்பதை அடிப்படைச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.[6]

சான்றெண் விளக்கம்:

1. டாக்டர். இளவரசு—பிறந்த நாள் எது? 'கவிக்கொண்டல்' இதழ்—மலர் 5, இதழ் 1, சூன் 1980 பக்கம் 9.


டாக்டர். இளவரசு—பாவேந்தரின் வரலாறு பற்றி... ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், புத்தகம் வெளியீடு 20, மே 1983 பக்கம் 3.

2. பாரதிதாசன்—பாரதிதாசன் கவிதைகள் 1&2—குடியரசுப் பதிப்பு வாழ்க்கைக்குறிப்பு 1940 & 1938 பக்கம் 4.

3. பேராசிரியர் மா. பா. குருசாமி — பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்—பாவேந்தர் மன்ற வெளியீடு, திருச்செந்தூர், நெல்லை.

4. கவிஞர் முருகுசுந்தரம்—பாவேந்தர் நினைவுகள், முதற்பதிப்பு 1979, பக்கம் 44.

5. மு. மாணிக்கம்—பாரதிதாசன் சரித்திர வெண்பா, குயில் நிலையம், சென்னை 1946 பக். 5.



6. பாரதிதாசன்—தம் கைப்படத் தஞ்சை மருதவாணன் அவர்கட்கு எழுதிய கடிதம்.

———

இந்தியருக்கு நோபல் பரிசு

நட்சத்திரங்களின் அமைப்பு, வளர்ச்சி, மறைவு குறித்துப் புதிய கோட்பாடுகளை வெளிப்படுத்தும் ஆய்வு நடத்தியமைக்காக 1983-ஆம் ஆண்டுக்கான இயற்பியல் துறை நோபல் பரிசு சுப்பிரமணியன் சந்திரசேகர் என்ற இந்தியருக்குக் கிடைத்துள்ளது. இது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தியாகும்.

1910 அக்டோபர் 19ஆம் நாள் லாகூரில் பிறந்த சந்திரசேகருக்கு இந்தப் பரிசு அவரது 73-வது பிறந்த நாள் பரிசாகக் கிடைத்திருக்கிறது. (நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நாள் 19-10-83). இந்தப் பரிசை (மொத்தம் 2 லட்சம் டாலர்=16 லட்சம் ரூபாய்) இதே துறையில் சிறப்பான ஆய்வு நடத்திய வில்லியம் ஃபௌலர் என்ற அமெரிக்க அறிவியல் அறிஞரோடு இவர் பகிர்ந்து கொள்கிறார்.

லாகூரில் பிறந்த சந்திரசேகர் சென்னை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியிலும் (1922-25), சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்தார். பின்னர், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் திரினிடிக் கல்லூரியில் மேல்படிப்பு படித்து, அமெரிக்காவிலுள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1947-ல் பேராசிரியர் ஆனார். 1953-ல் அமெரிக்கக் குடிமகனாகப் பதிவு செய்து கொண்டார். (இந்தியாவில் வேலைக்காக இருமுறை முயன்று, தோல்வியுற்றார்).

கணிதம் படிக்க விரும்பிய சந்திரசேகரை இயற்பியல் துறையில் ஈடுபடுத்தியது அவருடைய தந்தையார் சி. எஸ். ஐயர் ஆவார். சந்திரசேகரின் தாத்தா விசாகப்பட்டினம் ஏ. வி. என். கல்லூரியில் கணிதப் பேராசிரியராக இருந்தார். நோபல் பரிசு பெற்ற சர். சி. வி. ராமன் சந்திரசேகரின் நெருங்கிய உறவினர். இப்படி, இயல்பாகவே கல்விச் சூழலில் வளர்ந்த சந்திரசேகர் தொடக்க முதலே நீரை விரும்பும் வாத்தைப்போலக் கல்வியில் ஆர்வம் காட்டி முதன்மை மாணவராகத் திகழ்ந்ததில் வியப்பில்லை. மாநிலக் கல்லூரியில் இயற்பியல் துறைப் போட்டியில் கலந்து பரிசாகப் பெற்ற 'நட்சத்திரங்களின் அமைப்பு' என்ற நூல் இவரை வானியல் படிப்பில் ஈடுபட வைத்தது.

1939-ல் இவர் 'நட்சத்திர அமைப்புக்கு ஓர் அறிமுகம்' என்னும் நூலை வெளியிட்டார். நட்சத்திரங்கள் எரிந்து விழுந்தபின் என்ன ஆகும்? தரையில் விழுமா? வானத்திலேயே தங்குமா? இக் கேள்விக்கு விடை என்ன? எரிந்து விழும் நட்சத்திரம் அதனது ஈர்ப்புச் சக்திக்குட்பட்ட வெண் குருளை (white dwarf) என அழைக்கப்படும் ஓர் இறுகிய பந்துக்குள் விழுந்து அழியும் என்பதுதான் பொதுவாகத் தரப்பட்ட விளக்கமாகும். சந்திரசேகர் இதை ஆராய்ந்து, சூரியனைப்போல 4 மடங்கு பெரிதான நட்சத்திரம் சிதைந்து நொறுங்கும்போது வெண் குருளைக்கும் அப்பால் சென்று 'கரும் பொந்து'க்குள் (Black hole) விழும் எனக் கண்டார். இவ்

வாராய்ச்சியின் விளைவாக உருவான 'சந்திரசேகர் எல்லை' Chandrasekar limit) என அழைக்கப்படும் ஒரு கோட்பாடு வான் இயற்பியலில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

நாளொன்றுக்கு 12 மணி நேரம் வீதம் வாரம் முழுதும் அறிவியல் ஆய்வில் தொடர்ந்து ஈடுபடுவதால் தம் மனத்துக்குகந்த இலக்கியம், இசை, பயணம்செல்லல் முதலியவற்றை விட்டுக் கொடுக்க நேர்ந்ததாகச் சந்திரசேகர் குறிப்பிடுகிறார். ஒரு துறையில் உயர்நிலையை எட்டவேண்டுமானால் மற்றவற்றை விட்டுக்கொடுப்பதைத் தவிர்க்க இயலாது எனச் சொல்லி மனநிறைவு காணும் இந்த 73 அகவை பெரியவர் தம்மைக் கடவுள் நம்பிக்கை இல்லாதவன் என்றும் சொல்லிக் கொள்கிறார். குறிப்பிட்ட ஒரு பிரிவில் மட்டும் கவனம்செலுத்தாமல், அந்தப் பிரிவை உள்ளடக்கிய முழுப் புலத்திலும் Entire area) ஆய்வு நிகழ்த்துவதால் பல புதிய உண்மைகளைக் காண முடிகிறது என்று கூறும் இந்த அறிவியல் அறிஞர் தாம் மாரடைப்பு நோயால் துன்புற்ற காலத்தும், இதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட சமயத்திலும் தம் ஆய்வுப் பணியை மறக்கவில்லை. இந்த விடாமுயற்சியின் விளைவு நோபல் பரிசு!

செய்தி உதவி: அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக்கழகம். (ஆதாரம்: The Hindu, 20-10-83; 22-10-83; 6-11-83; Sunday, 6,12-11-83, கலைக்கதிர், நவம்பர், 83)

———

தமிழ் இலக்கியக் கழகம், பாளையங்கோட்டை

நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக்கழகம், கல்லூரி மாணவர் தம் எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் ஏற்றமுறச் செய்யும் வகையில் போட்டிகளை முறையாக நடத்திப் பரிசளித்துப் பாராட்டி வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய ஆய்வுப் பொருளாக "வ. உ. சி. வளர்த்த தமிழ்" என்னுந் தலைப்பில் கட்டுரைப்போட்டி ஒன்றினை அமைத்துத் தமிழகத்தின் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் பயிலும் ஆண், பெண் மாணவர்கள் அதில் கலந்துகொள்ளலாமென ஓர் அறிவிப்பினை விடுத்துள்ளது. அதில் கட்டுரை வந்து சேரவேண்டிய நாள் 31-12-1983 என்றும் 29-1-1984ல் நெல்லையில் நிகழவிருக்கும் தமிழ்த் திருவிழாவில் பரிசுகள் வழங்கப்பெறும் என்றும் அறிவித்துள்ளது. கருத்தோவியங்களை அனுப்பவேண்டிய முகவரி:

பேராசிரியர் பா. வளன் அரசு,
தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
1 அ. நெல்லைநாயனார் தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

போட்டி விதிமுறைகள் பற்றிய விவரங்கள் தேவைப்படுவோர் மேலே கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

நாடுகாண் நெடுவரை

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

பதிற்றுப்பத்தில் 85 ஆம் பாட்டில் ஏழாவது வரியில் 'நாடுகாண் நெடுவரை' என்ற பெயர் வருகின்றது.

''தீஞ்சுனை நிலைஇய திருமா மருங்கிற்
கோடுபல விரிந்த நாடுகா ணெடுவரை''

—பதிற்றுப்பத்து-85-7

'நாடுகாண் நெடுவரை'யென்றது தன்மேல் ஏறி நாட்டைக் கண்டு இன்புறுதற்கு ஏதுவாகிய ஒக்கமுடைய (ஓங்குதல்) மலை யென்றவாறு. இச் சிறப்பானே இதற்கு, 'நாடுகாணெடுவரை' என்று பெயராயிற்று என்றும், பதிற்றுப்பத்தின் பழைய உரை கூறு கின்றது. உ. வே. சாமிநாதய்யரின் குறிப்புரையில், 'நாடுகாண் நெடுவரை : ''நாடுகா ணனந்தலை'' (மலைபடுகடாம்-270; பெருங். 2-10; 70-74. 6-7.) இனிய நீரையுடைய சுனைகள் நிலைபெற்ற மலைவளத்தையுடைய, பெரிய பக்கங்களைப் பெற்ற சிகரங்கள் பல ஆகாயத்தே விரிந்த, தன்மீது ஏறி நாடு முழுவதும் காணக்கூடிய உயர்ச்சியைப்பெற்ற. நன்றுவென்னும் மலையிடத்தில்,' என்ற விளக்கம் கூறப்பட்டுள்ளது.

''கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
னாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்''

—மலைபடுகடாம்-268-270

''கொம்புகள் பலவும் முற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய ஆலமரத்தினிடத்தே கூடின பல வாச்சியங்களை யொத்த பல ஓசையுங்கூடின பறவைத்திரளையுடைய நாடுகளையெல் லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெல்ல மெல்லப் போவீர்'' என்று மலைபடுகடாம் வரிகளுக்கு உரை கூறப்பட்டுள்ளது. உ. வே. சாமிநாதய்யர் எழுதிய அடிக்குறிப்பில் 'திருக்குறுங்குடியின் பக்கத்துள்ள ஒரு மலையின் உச்சி மிகவும் உயர்ந்து நாடுகாணி என்று இன்றும் வழங்குகின்றது' என்று எழுதி யுள்ளார்.

''கோடுவாய் சிலம்பிற் கொழுஞ்சிகைக் குன்றின்
பாடமை படுகால் பைய வேறி
நங்காய் காணுன் பெருமா னன்னகர்''

—பெருங்கதை-2-10-70-74

கோசம்பி நகரத்தைப் பார்க்க மலையைப்போன்ற கட்டுமலையின் உச்சிக்குப் படிக்கட்டுகளால் ஏறலாம் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டைக் காண்பதற்கு மலையிலேறி உச்சியிலிருந்து பார்த்து இன்புறும் பழக்கம் சங்ககாலத்தில் இருந்துள்ளதைப் பதிற்றுப்பதது கூறியுள்ளது. மற்றும் மலைபடுகடாம் கூறுவதிலிருந்து மலைமேலேறி நாடுகளையெல்லாம் காணக்கூடிய அகன்ற இடத்தைச் சங்ககாலத்திலேயே குறித்து வைத்திருந்தார்கள் என்று தெரிகின்றது. மற்றும் கோசம்பி போன்ற பெருநகரங்களைப் பார்க்கச் செயற்கையான கட்டுமலையின் படிக்கட்டுகளில் ஏறி உச்சியிலிருந்து பார்த்து இன்புறும் வழக்கம் இருந்ததைப் பெருங்கதை கூறியுள்ளது.

நாடுகாணி என்று திருக்குறுங்குடியில் மலையின் உச்சியைப் பற்றிக் கூறும் பேச்சுவழக்கை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும். கேரளத்திலிருந்து நீலம்பூர் காடுகளைத் தாண்டிக் கூடலூர் வழியாக நீலகிரிக்குச் செல்லும் மலைச் சாலையில் "நாடுகாணிச்சுரம்" என்றோர் ஊர் இன்றும் இருப்பதைக் காணலாம். நாடுகாணிச்சுரம் என்ற பேச்சுவழக்குப்பெயர் நாடு காண் நெடுவரை என்ற பதிற்றுப்பத்தின் பெயர் வழக்கிற்கு மிகவும் ஒத்துள்ளதைக் காணலாம், நாட்டைக் காண்பதற்குத் தாண்டிச் சென்ற சுரம் என்று மலையாள மொழியில் வழங்கப்படுகிறது. சுரம் என்ற சங்ககாலத் தூய வழக்கு இன்றும் மலையாளத்தில் வழங்குவதைக் காணலாம். சங்க நூல்களில், சுரம் என்ற வழக்கு கடத்தற்கரிய இடையூறன இடத்தையும், வழியையும் குறிக்கும். இக்காலத்தில் பொழுதுபோக்கு இன்பத்திற்காக மலைக்குச் செல்பவர்கள் மலைமேல் இருந்து நகரையோ, ஊரையோ பார்க்க வாய்ப்பான இடங்களைச் சாலையோரமாக அமைத்திருப்பதைக் காணலாம். கொடைக்கானல் மலைக் குச் செல்லும் மலைச்சாலையில் மதுரையைப் பார்க்க இத்தகைய நாடுகாணும் இடங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதுபோன்றே நீலகிரி மலையிலும் ஏற்காடு மலையிலும் சாலைகளில் நாடுகாணுமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய இடங்களைச் சங்ககாலத்திலேயே பதிற்றுப்பத்தும். மலைபடுகடாமும் மக்கள் நாட்டைக் கண்டு இன்புறுதற்குரிய இடமாகக் கூறியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. நகரைக்கண்டு இன்புறக் கட்டுமலைகளைச் செய்து அதன் உச்சியிலிருந்து நகரைப்பார்த்து இன்புறும் வழக்கத்தைப் பெருங்கதை கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய நாடுகாண் இடங்களை (Vantage point, View point) என்றும் இக்காலத்தில் அழைப்பர். இக்காலத்தில் இத்தகைய இடங்களை முதலில் கண்டுபிடித்த ஆங்கிலேயர் பெயராலேயே இந்த இடங்கள் அழைக்கப்படுவதையும் காணலாம். இந்த இடங்களிலிருந்து தொலை நோக்குக் கண்ணாடியாலும் (Binaculors) நீளுள்ள பெரிய கைரேம்

களைக் கண்டு இன்புறுவர். இத்தகைய இடங்களுக்குத் தமிழில் கலைச் சொல்லாக 'நாடுகாணி' என்றோ, 'நாடுகாணி இடம்' என்றோ வழங்கினால் சிறப்பாகவும் பொருத்தமாகவும் இருக்கும். நாடு கண்டு இன்புறுவதையுணர்ந்தே பதிற்றுப்பத்து 85 ஆம் பாட்டுக்கு 'நாடுகாண் நெடுவரை' என்ற பெயரை வழங்கினது சிறப்பாக அமைந்துள்ளதைக் காணலாம்.

மலைபடுகடாத்தில் பல பறவைகள் ஆலமரத்திலிருந்து ஒருங்கே ஒலித்ததை, 'கூடியத்தன்ன குரல்' என்று கூறப்பட்டுள்ளதையும் கவனிக்கவேண்டும். 'பல வாச்சியங்களையொத்த பல ஓசையுங் கூடின' என்று உரை கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் பல வாச்சியங்களை ஒருங்கே இயக்குவதை **Orchestra** என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இந்த ஆங்கிலச் சொல்லுக்குக் 'கூடியம்' என்று கலைச் சொல்லாகப் பெயரிடுவது பொருத்தமாகவும் சிறப்பாகவும் இருக்கும். இவ்வாறு கலைச்சொல் ஆக்கத்தைத் தமிழ்நூல் வழக்குகளிலிருந்து கண்டுபிடித்து அமைப்பது சாலவும் பொருத்தமாக இருக்கும்.

கஃபா—ஒரு விளக்கம்

செந்தமிழ்ச் செல்வி சென்ற இதழில் (சிலம்பு 58 பரல் 3) 82ஆம் பக்கத்தில், 3ஆவது பிரிவில், திரு. பத்மநாபன் என்பவர் கூற்றாகக் கீழ்க்காணும் செய்தி காணப்படுகிறது :

"இஸ்லாமியப் பெருமக்கள் புனிதப் பயணம் செல்லும் மக்காவிலுள்ள 'கஃபா' என்ற திருத்தலத்தில் திரைகளுக்கு நடுவே இலிங்கமே பெரிய அளவில் இருப்பதாகத் திரு. பத்மநாபன் குறிப்பிடுகிறார். (ஆதாரம் உயர் உல் ஒகுல்—அரபு இலக்கியம்)" என்று எழுதப்பட்டிருக்கிறது.

திரைகளுக்கு உள்ளே இருக்கும் 'கஃபா' என்ற அந்தச் சின்னஞ் சிறு அறைக்குள் இன்றுமட்டுமல்ல, அந்த நாட்டு மக்கள் முழுக்க முழுக்க விக்கிரக வணக்கத்தில் ஈடுபட்டிருந்த பூர்வகாலத்திலும்கூட அந்த அறையைச்சுற்றி, இலிங்கம் உட்படப் பல பதுமைகள் இருந்தனவேதவிர, அந்த அறைக்குள் எந்தச் சின்னமும் இருந்ததில்லை. இது நிறைந்த ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அது உள்ளே எவரும் நுழைய முடியாத—நுழையக் கூடாத சிதம்பர ரகசியமல்ல. பல தேசத்தவரும் அவ்வப்பொழுது புனித இடம் எனக்கருதி உள்ளே சென்று துடைப்பம் பிடித்துப் பெருக்கிச் சுத்தம் செய்கிறார்கள்.

ஆகவே, பத்மநாபன் எழுதியிருப்பது மிகப்பெரிய முரண்பட்ட வாதமாகும்.

—எம்கே. ஈ. மவ்லானா
ஆசிரியர், 'பசுங்கதிர்', சென்னை.

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழா—ஆய்வுக் கூட்டம்

தமிழ்மொழியில் முற்றிய புலமை கொண்டு தமிழ்ப் பேராசிரியராகவும் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், தலை சிறந்த ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழா 12—4—1984 ல் நிகழவுள்ளது. இவ் விழாவைச் சிறப்புடன் நடத்த, பூண்டிப் பெரு நிலக்கிழாரும், கல்விக் காவலருமாகிய திருமிகு கி. துளசிஐயா வாண்டையார் அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழாக்குழு அமைக்கப்பெற்றுள்ளது. இக்குழுவில் அனைத்துக் கட்சியினர், தமிழறிஞர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட சான்றோர் பலர் அடங்கியுள்ளனர்.

இக்குழுவின் ஆய்வுக் கூட்டம் 12—11—1983 சனிக்கிழமை காலை 10 மணியளவில் கரந்தைப் புலவர் கல்லூரியில் குழுவின் துணைத் தலைவர் திருமிகு சி. தங்கையன், எம். ஏ., ஐ. பி. எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நூற்றாண்டு விழாக் குழுச் செயலாளர் பேராசிரியர் ப. விருத்தாசலம், எம். ஏ., உறுப் பினர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். விழாக்குழுப் பொருளாளர் திரு. யு. சுப்பிரமணியன், ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்கள், டாக்டர் மெ. சுந்தரம், திரு. ந. மு. வே. நடராசன், பேரா சிரியர் மது. ச. விமலாநந்தன், நாவலர் சி. அரசப்பனார், டாக்டர் வே. காத்தையன், பேராசிரியர் பிச்சைக்கண்ணு, மதுரைச் சின்னடைக்கன், இளங்காடு திரு. குட்டச்சேவு சேதிராயர், பாவலர் ச. பாலசுந்தரனார், பெரும்புலவர் வி. அ. அரங்கசாமி, பேராசிரியர் மேஜர் கிருட்டிணமூர்த்தி, திரு. பழனியப்பன் ஆகியோர் நூற்றாண்டு விழாப்பற்றிய தம் கருத்துகளை எடுத்துரைத்தனர். இக்கூட்டத்தில், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் அனைத்து நூல் களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மறுபதிப்புச் செய்து வெளி யிடுதல், சிறந்த முறையில் நூற்றாண்டு விழா மலர் வெளியிடுதல், ந. மு. வே. நாட்டார் பெயரில்,கல்வி அறக்கட்டளை நிறுவுதல், நாட்டார் அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவுதல், உருவப் படம் வெளியிடல், தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை, சென்னை முதலிய நகரங்களில் நூற்றாண்டு விழாவினைச் சிறப்புற நடத்துதல் முதலிய பணிகளைச் செய்தல், நூற்றாண்டு விழா உள்ளிட்ட அனைத் துப் பணிகட்கும் உருபா ஐந்து இலக்கம் திரட்டுவதற்கும் பணிகளைப் பகிர்ந்து செயல்படுவதற்கும் குழுக்கள் நிறுவுவது என்றும், பல்கலைக் கழகங்கள், தமிழ்ச் சங்கங்கள், தமிழாசிரியர் கழகங்கள் முதலிய வற்றை நூற்றாண்டு விழா நடத்த வேண்டிக்கொள்ளுதல் ஆகிய முடிவுகள் செய்யப்பெற்றன.

———

செய்திகள்

மறைமலையடிகளார் அறக்கட்டளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 3—12—83ல், மாலை 6 மணியளவில், சென்னை தேவநேயப்பாவாணர் மாவட்ட மைய நூலகக் கட்டிடத்தில் அறக்கட்டளைகள் நிறுவுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குச் சட்ட மேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை ஏற்ருர். மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கள், முறையே வ. உ. சி. அறக்கட்டளை, மறைமலை அடிகளார் அறக் கட்டளை, டாக்டர் மு. வ. அறக்கட்டளை, மொழிஞாயிறு டாக்டர் தேவநேயப்பாவாணர் அறக்கட்டளை ஆகிய அறக்கட்டளைகளை நிறுவி ஞர்கள். இவற்றுள் மறைத்திரு. மறைமலையடிகளார் அறக்கட்டளை நிதியினைக் கழக ஆட்சியர் உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப். அவர்கள் வழங்க அமைச்சரவர்கள் பெற்றுக் கொண்டார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினுர். திரு. வலம்புரிஜான், எம். ஏ., எம். எல். சி துவக்கவுரை ஆற்றினுர். டாக்டர் ஏ. என். பெருமாள் நன்றியுரை கூறினுர்.

தமிழ்க்குடிமகனுர்க்கு முனைவர் பட்டம்

செந்தமிழ் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் வழித்தோன்றலும், தனித் தமிழியக்கங்களின் தலைவரும், நல்ல தமிழ்ப் பேச்சாளரும், செயலாக்கம் உடையவருமான யாதவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு. தமிழ்க்குடிமகனுர் அவர்களுக்கு 8-11-1983ஆம் நாள் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முனைவர் (டாக்டர்) பட்டம் அளித்துள்ளது.

திரு. தமிழ்க்குடிமகனுர் அவர்கள் "10 ஆண்டுத் தமிழ்க் கவிதைகள்—1967-'76" என்ற தலைப்பில் முறையாக ஆய்வு செய்து இப் பட்டத்தைப் பெற்றுள்ளார். ஆய்வுப்பரப்பு விரிவாக இருப்பினும், தமது ஆய்வினைச் சிறப்பாகவும் திறம்படவும் செய் துள்ளார்கள்: தக்காரிடம் ஒப்படைக்கப்பட்ட தலைப்பென இதனைத் தமிழறிஞர்கள் பாராட்டுகின்றனர். வளம்கொழிக்கும் தமிழிலக்கியப் பரப்பை, முனைவர் தமிழ்க்குடிமகனுரின் பன்மொழி இலக்கிய ஒப்பாய்வுகள் மேலும் விரிவாக்கும் என்பது உண்மை. முனைவர் பட்டம்பெற்ற தமிழ்க்குடிமகனுர்க்கு எமது வாழ்த்துகளைத் தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

கந்தபுராணத் தொடர் விரிவுரை

சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள ஒய். எம். ஐ. ஏ. தமிழ்ப் பேரவையின் சார்பில் 29-11-83 முதல் செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 6 மணி முதல் 7 மணிவரையில் பிரசங்க சண்ட மாருத இரத்னுகரம் அ. தி. அ. ஈசுவர் அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவார். அன்பர்கள் கேட்டுப் பயன்பெறுவார்களாக.

திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பல்லாவரம் 34, சாவடித்தெரு மறைமலையடிகள் கலைமன்றத்தில் ஞாயிறுதோறும் மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை அ. தி. அ. ஈசுவர் அவர்கள் திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அன்பர்கள் வருகைதந்து பயன்பெறுவார்களாக.

சைவத்திரு ச. சிவகுமாரன் மறைவு

சைவப் பாதிரியார் எனப் போற்றப்பட்ட காலஞ்சென்ற ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் மைந்தரும், சைவசித்தாந்தம், பெரிய புராணம், திருமந்திரம் ஆகியன பற்றி விரிவுரையாற்றும் சிறந்த சொற்பொழிவாளருமான டாக்டர் ச. சிவகுமாரன், அவர்கள் தமது 67ஆவது அகவையில் 2—12—83ல் இறையடி யெய்தினர்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். திரு. சிவகுமாரன் கழக விழாக்களில் கலந்து கொண்டு சொற்பொழிவுகளாற்றியுள்ளார். மறைந்த இச் சைவப் பெரியாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கட்டுரையாளர்கள் கவனத்திற்கு

தாள் விலை ஏற்றம் காரணமாகச் செந்தமிழ்ச் செல்வியினை அதிக பக்கங்களுடன் வெளியிட இயலவில்லை. திங்களுக்கொருமுறை வெளிவரும் இவ்விதழில் நீண்ட தொடர்கட்டுரைகளை வெளியிடுவதால் வேறுபல அரிய புதிய கருத்துகட்கு இடமளிக்க இயலாமல் பல கட்டுரைகளும் கவிதைகளும் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, அன்பர்கள் அருள்கூர்ந்து பலர்க்கும் வாய்ப்பளிக்கத் துணைபுரிவார்களாக.

—ஆசிரியர்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫௮, ௧௧௮ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00

'அம்மா'வும் 'மம்மி'யும்

'அம்மா' என்ற அழகு தமிழ்ச்சொல்லிருக்க, தம் மக்கள் மம்மி (Mummy) என்று தம்மைச் செல்லமாக அழைப்பதையே நாகரிகமெனக் கருதுகின்றனர் நம் தமிழ்த் தாய்மார்கள் பலர். மம்மி என்ற சொல்லுக்கு எகிப்து நாட்டில் 'பிணம்' என்ற பொருள் வழங்கப்படுகிறது.

சி. தே. இளமுருகன்,

மகாகவி பாரதி நகர், சென்னை-39

மதிப்புரை

தமிழீழ விடுதலையின் விலை

[ஆசிரியர்: புலவர் பொதிகைச் செல்வன். பொதிகைப் பதிப்பகம், கா. புதூர், பவானி, 638301, விலை : ரூ 5-00.]

எதற்கும் ஒரு விலையுண்டு; அதுபோலவே குமுகாய விடுதலைக்கும், நாட்டு விடுதலைக்கும் ஒரு தனி விலையுண்டு. மற்ற விலைகட்கும் விடுதலையின் விலைக்கும் நிரம்ப வேற்றுமைகள் உண்டு. அடிமை வாழ்வின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற, பலர்தம் இன்னுயிரையும் விலையாகக் கொடுக்க வேண்டியுள்ளது. இது உலகின் எப்பகுதியிலும் நடைபெறுவது இயல்பு. ஆனால், அண்மையில் இலங்கையில் நடைபெற்ற விடுதலைப் போரில் இலங்கைத் தமிழர்கள் கொடுத்த விலை, உலகில் இதுகாறும் எந்த நாடும் தந்திடாத விலை! அங்குச் சிங்களர் கட்டவிழ்த்து விடப்பட்டுத் தமிழருக்கு இழைத்த கொடுமைகளைச் சொல்ல, நா நடுங்கும்; எழுதக் கைகூசும். அவற்றை விரிக்கின் பெருகும். ஆனால், இங்குள்ள சிலர் அங்குள்ள நிலைமைகளை மூடிமறைக்கின்றனர். எனினும் ஈழத்தமிழர்கள் பட்ட-படுகின்ற இன்னல்களை யாரும் மறக்கவோ, மறைக்கவோ, மறுக்கவோ இயலாது. இந்த உண்மைகளைத்தாம் புலவர் பொதிகைச் செல்வன் அவர்களின் பாடல்கள் உணர்த்துகின்றன.

'தமிழீழ விடுதலையின் விலை' என்னும் இப் பாடல் தொகுப்பு, சிங்கள வெறியர்கள் தமிழீழ விடுதலை விரும்பிகளையும், தாய்மார்களையும் எப்படியெல்லாம் துன்புறுத்தினர் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. 33 தலைப்புகளில் அமைந்துள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் படிப்போர் நெஞ்சை நெகிழ்விக்கின்றன. சில சிங்களர்மீது சினங்கொள்ளச் செய்கின்றன; சில கண்ணீர் சிந்த வைக்கின்றன; சில நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. 'ஏ! தன்னை மறந்த தமிழினமே!' என்ற தலைப்பிலுள்ள பாடல்களை மட்டும் தமிழர்கள் தம் மனத்தில் இருத்தினால் போதும். குட்டிமணி, தங்கதுரை, செகன் போன்றோர் சிந்திய கண்ணீரும் செந்நீரும் வீண்போகாது. காலம் பதில் சொல்லும்.

பல்லாங்குழி—திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு

[ஆசிரியர்: டாக்டர் திருவாட்டி தாயம்மாள் அறவாணன், எம். ஏ., பிஎச். டி. 15, தமிழ்க்கோட்டம், ஐயாவுகாலனி, சென்னை-29. விலை : ரூ. 12-00.]

தமிழ்நாட்டுத் தாய்மார்கள் தம் இல்லங்களில் பொழுது போக்கிற்காக விளையாடும் விளையாட்டுக்களுள் பல்லாங்குழியும் ஒன்று. இது மிகப் பழைமையான விளையாட்டு. தமிழ்நாட்டுக் கலை, நாகரிகம், பண்பாடு முதலியன அயல் நாடுகளிலும் பரவியுள்ளன என்பதற்குப்

பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் இந்தப் பல்லாங்குழி விளையாட்டும் ஒன்று. ஆப்பிரிக்காவில் உள்ள தக்கார் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிய திருமதி டாக்டர் தாயம்மாள் அவர்கள், ஆப்பிரிக்கப் பெண்கள் நம்மூரில் தாய்மார்கள் பல்லாங்குழி ஆடுவது போலவே ஆடியதைக்கண்டு வியப்புற்றார். அவ் வியப்பின் விளைவாகத் தோன்றிய ஆராய்ச்சியே 'பல்லாங்குழி—திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு" என்னும் இவ்வரிய நூலாகும். இதில் ஆப்பிரிக்கப் பல்லாங்குழிக்கும் தமிழ் நாட்டுப் பல்லாங்குழிக்கும் அமைப்பிலும் விளையாட்டு முறைகளிலுமுள்ள ஒற்றுமைகள் விளக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றிப் பல்லாங்குழி ஆட்டத்தின் தோற்றம்—பரவியவிதம்—விளையாட்டின் உட்கருத்து—அதன் பயன், பல்லாங்குழிபற்றிய இலக்கியச் சான்றுகள்—பல்லாங்குழிபற்றிய நாட்டுப்புறப்பாடல்கள், விடுகதைகள், நாட்டுப்புற நம்பிக்கை, பல்லாங்குழி சிற்பங்கள் ஆகியன பற்றிய செய்திகள் விளக்கமாகப் புள்ளிவிவரங்களுடன் தரப்பட்டுள்ளன.

சாதாரணப் பல்லாங்குழிக்கு இவ்வளவு ஆராய்ச்சியா ? என நினைக்கத் தோன்றும். ஆனால் திராவிட—ஆப்பிரிக்க ஒப்பீடு என்னும் அடிப்படையில் காண்போர்க்குப் பல அரிய ஆராய்ச்சிக் கருத்துகள் இதில் அடங்கி உள்ளமை புரியும். டாக்டர் தாயம்மாள் அறவாணன் அவர்களின் ஆராய்ச்சித் திறனும் முயற்சியும் பாராட்டத் தக்கவை.

சேது முதல் சிந்து வரை (பூர்வ மனித ஆய்வு நூல்)

[ஆசிரியர் : எம்கே. ஈ. மவ்லானா, 'பசுங்கதிர்' பதிப்பகம், 43, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை-600001, பக்கங்கள் 315, விலை : ரூ. 25-00.]

மனிதன் எப்போது தோன்றினான் ? அவன் தோன்றிய நிலப் பரப்பு எது ? அங்ஙனம் தோன்றிய மனிதன் எந்த இனத்தைச் சேர்ந்தவன்—என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பதுதான் மனித இன ஆய்வு எனப்படும். இந்த ஆய்வு ஓர் எல்லைக்குள் நின்றுவிடக் கூடியதன்று. விரிந்துகொண்டே செல்லக்கூடியது. எனினும் இதுகாறும் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம். அத்தகைய ஆராய்ச்சியினைத்தான் இந் நூலாசிரியர் மிகத்திறமையாக—யாரும் குறைகாணா வகையில் செய்திருக்கிறார்.

இவ் வாய்வின்படி முதல் மனிதன் சேதுவில் தோன்றி, சேதுவிலும் குமரியிலுமாக வளர்ந்து, அங்கிருந்தே எங்கும் பரவினான் என்றும், அந்த மனிதன் பேசிய மொழி இன்றைய தமிழ் அல்லது தமிழுக்கு நெருங்கிய உறவுடைய ஒரு மொழி என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார் இந் நூலாசிரியர். இதற்கு அடிப்படை ஆதாரமாக விவிலியத்தையும், இஸ்லாமிய இதிகாசங்களையும் எடுத்துக்காட்டுகிறார். அதுமட்டு மன்று; மொகஞ்சதாரோ, லெமூரியாக் கண்டம் ஆகியவற்றைப்பற்றிய ஆராய்ச்சிக் கருத்துகளையும், சிலப்பதிகாரம், விவிலியம், திருக்குர்ஆன், அதர்வவேதம் மற்றும் "The Ancient

History of the World", பாகவதம், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்தும் மேற்கோள்கள் காட்டித் தமது கொள்கையை நிலைநாட்டுகிறார்.

பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், சிலம்பொலி செல்லப்பன், டாக்டர் வா. மு. சேதுராமன், கேப்டன் அமீர் அலி, பேராசிரியர் அப்துல் கபூர், கலைமாமணி ஆலிஜனாப் கவி. கா. மு. ஷெரீப், ஆ. கா. அ. அப்துஸ் சமது, மௌலானா மௌலவி அப்துல் வஹ்ஹாப், எம்.ஏ., பிஎச்.டி ஆகிய அறிஞர் பெருமக்களின் அணிந்துரைகளையும், பாராட்டுரைகளையும், வாழ்த்துரைகளையும் தாங்கி வெளிவந்திருக்கும்இந்நூல், தூய அழகிய விறுவிறுப்பான தமிழ்நடையில் அமைந்து ஆராய்ச்சியாளரின் சிந்தனைக்கு வேலைதரும் சீரிய நூலாகத் திகழ்கிறது. ஆசிரியர் திரு. மவ்லானா இந் நூலினை உருவாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் வியந்து பாராட்டத்தக்கவை.

துறைதோறும் திரு. வி. க.

[பதிப்பாசிரியர்: பேராசிரியர் பா. வளன் அரசு, எம்.ஏ., பி.எட்., கதிரவன் பதிப்பகம், 1 அ, நெல்லை நாயனார் தெரு, பாளையங் கோட்டை, திருநெல்வேலி-2, விலை ரூ. 6-00.]

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களைப்பற்றி இதுகாறும் எத்தனையோ நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும், அவர் ஒரு பல்துறை அறிஞர் என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் நூல் இதுவே என்னுமளவிற்கு அறிஞர் பெருமக்கள் பதினொருவரின் கருத்துரைகள் இதன்கண் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி தனித்தமிழ் இலக்கியக் கழகம் ஆண்டுதோறும் புலவர் பெருமக்கள் பலரைக் கொண்டு இப்படியொரு கருத்துத் தொகுப்பினை அறிமுகம் செய்து வருகின்றது. அம் முயற்சியின் வெளிப்பாடே இந் நூல். இந்நூலின் இறுதியில் 'இதழாசிரியர் திரு.வி.க' என்னுந்தலைப்பில் வழங்கியிருக்கும் கருத்தோவியம் மிக அருமையான கட்டுரையாகும். ஏனெனில் இதழ் உலகில் திரு. வி. க. அவர்கள் ஆற்றிய தொண்டுகள் மற்றெல்லாத் தொண்டுகளையும்விட நிலையான தொண்டாகத் திகழ்கின்றன. அவற்றை ஆசிரியர் தொகுத்துக்கூறும் முறை பாராட்டத் தக்கது. மற்ற கட்டுரைகளும் திரு. வி. க அவர்களின் வரலாற்றைக் கூறும் வளமான கட்டுரைகளே.

தமிழ்இனப் படுகொலை

[ஆசிரியர்: எஸ். டி. எஸ்., போர்வாள் பதிப்பகம், 3, சுப்பராயன் சாலை, சென்னை-600004, விலை: ரூ. 2-50]

தமிழ், தமிழன், தமிழ்நாடு என்றெல்லாம் பேசுவதும் எழுதுவதும் இன்றைய அரசியலில் பெருவழக்காகிவிட்டது. ஆனால் தமிழ் உணர்வுடையோர் தொகை அருகியே காணப்படுகின்றது. இதற்கோர் எடுத்துக்காட்டு வேண்டுமெனில், இலங்கைத் தமிழர் சிக்கலைக் கூறலாம். இலங்கையில் சிங்களர் தமிழரை எப்படியெப்படியெல்லாம் 'சித்திரவதை' செய்து கொன்றொழித்தனர் என்ற செய்திகளை ஏடுகள் மூலமும், நேரில் கண்டோர் மூலமும் அறிந்து தமிழின உணர்வுடையோர்

பதை பதைத்தனர். மற்றையோர் எங்கோ. ஏதோ நடந்தது நமக்கென்ன என்று வாளா இருந்தனர், வேறு சிலர் இதற்கு எதிர்வாதமும் செய்தனர். இது நாடறிந்த உண்மை. இந்நிலையில் இனப்படுகொலைச் செய்திகளைக்கேட்டுப் பதைபதைத்த உள்ளங்களுள் ஒன்றுதான் எஸ். டி. எஸ் அவர்களின் உள்ளம். அவர் தம் உள்ளக் குமுறல்களைத் 'தமிழினப் படுகொலை' என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கும் இச் செய்தித் தொகுப்பு நூல் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. ''கண்ணின் மணியே! கண்ணின் மணியே!'' என்று விளித்து, அவர் எடுத்துக் கூறி வரும் செய்திகள் படிப்போர் உள்ளங்களை நெகிழ்வித்துக் கண்ணீர் சிந்தச் செய்கின்றன. அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் 'போர்வாள்' இதழில் தொடர்பாகச் சிந்திவந்த கண்ணீர்த்துளிகளின் தொகுப்பே இந்நூல் எனில் மிகையன்று. பேரறிஞர் அண்ணா அவர்களின் உண்மைத்தம்பிகளுள் ஒருவராகிய எஸ். டி. எஸ். அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் 1961 ல் இலங்கைத் தமிழரின் இன்னல்கள்பற்றி ஐ. நா. மன்றப் பொதுச் செயலருக்கு விடுத்த செய்தியையும், இலங்கை அரசுக்கு விடுத்த எச்சரிக்கையினையும் இதன்கண் விரிவாக எடுத்துக்காட்டுகிறார். அண்ணா அவர்களின் தொலைநோக்கினை விளக்கும் அச் செய்திகளை ஒவ்வொரு தமிழரும் படித்தல் வேண்டும். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், ''எதிர்காலத் தலைமுறையினர் நம் இனத்துக்குச் சிங்களரால் இழைக்கப்பட்டுள்ள எண்ணற்ற கொடுமைகளை நன்கு அறிந்துகொள்ள இல்லந்தோறும் பதுகாப்பாக வைக்கப்பெற வேண்டிய அரிய நூல் இது'' என்று பதிப்பகத்தார் குறிப்பிட்டுள்ளதையே நாமும் கூறுகிறோம்.

HINDUISM—The Universal Religion

[By Dr. S. Padmanaban, Vigneswarar Publication, 20, State Bank Colony, Nagarkoil-629001, Price Rs. 3-00.]

1982ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற உலக இந்துமத மாநாட்டில் டாக்டர் எஸ். பத்மநாபன் அவர்கள் வழங்கிய ஆராய்ச்சிக் கட்டுரையே, **'Hinduism The Universal Religion'** என்ற சிறு நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இதில் இந்துமதம் என்னும் வேத மதத்தின் மேன்மைகள் விளக்கப்படுவதோடு, சைன மதம், புத்த மதம், சீக்கிய மதம் ஆகிய இந்திய மதங்களைப்பற்றியும் சுருக்க விளக்கங்கள் அடங்கியுள்ளன. அத்துடன் கிறித்தவ மதமும், இஸ்லாமிய மதமும் எந்த அளவுக்கு அடிப்படையில் இந்துமதத் தொடர்புடையன என்பதையும் கூறுகிறார் இந்நூலாசிரியர்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை, அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

அப்பர் அச்சகம், சென்னை-108.